வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 03 11.08.2022 வியாழக்கிழமை இதழ் : 247 பக்கங்கள் : 16

# யுவான் வாங் -5 கப்பல் விவகாரம் இரு தலை கொள்ளியாக இலங்கை!

## கப்பல் அம்பாந்தோட்டைக்கு வரும் - மைத்திரி இலங்கைக்கு எதிராக சீனாவில் பிரசாரங்கள்

கொழும்பு, ஒகஸ்ட் 11

**யுவான் வாங் - 5 கப்பல் இலங்கை வரும் விடயத்தில் இருதலை கொள்ளியாக இலங்கை தவிக்கிறது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நம்பியுள்ள இலங்கை அந்த நிதியத்தின் முக்கிய அங்கத்துவ நாடான சீனாவையோ அல்லது இலங்கைக்கு பெரும் ஆதரவளித்து வரும் இந்தியாவையோ பகைக்க முடியாத நிலையில் உள்ளது.**

இந்த நிலைமையில், சீனாவின் யுவான் வாங் கப்பல் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் இலங்கைக்கு வரும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அத்துடன், இந்தக் கப்பல் இலங்கை வருவதற்கு அமைச்சருக்கு தெரியாமல் அதிகாரிகள் அனுமதி வழங்கினர் என்றும் கடந்த ஜூலை 12ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டதாகவும் மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றில் கூறினார்.

சீனாவின் அதிநவீன தொழில்நுட்ப கப்பலான யுவான் வாங் -5, இன்று 11 ஆம் திகதி இலங்கை வரும் என்றும் எதிர்வரும் 17ஆம் திகதிவரை அங்கு தரித்து நிற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் ப்பல் இலங்கை வருவதற்கு இந்திய தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில், பயணத்தை ஒத்திப்போடுமாறு இலங்கை 15

# 12 திட்டங்களுக்கு நிதியை நிறுத்தியது ஜப்பான்

கொழும்பு, ஒக. 11

ஜப்பானிய சர்வதேச நிதியமான ஜெய்க்கா, இலங்கையில் நிதியளித்து வந்த 12 திட்டங்களுக்கான தனது நிதியுதவியை நிறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் மீட்சிக்கு ஒரு வழிவரைபடத்தை வழங்கும் வரை 15

# எதிர்வரும் 21 ஆம் திகதி புதிய கூட்டணி உதயம்!

## டலஸ், மைத்திரி அணிகளை வளைத்துப்போட பேச்சுக்கள்

கொழும்பு, ஒக. 11

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியிலிருந்து வெளியேறிய பங்காளிக் கட்சிகள் இணைந்து, புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளன.

குறித்த கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது எனவும், கூட்டணியின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் அன்றைய தினமே அறிவிக்கப்படும் எனவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ 15

# பெற்றோல் பெற சென்றவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு!

## தாவடியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக. 11

பெற்றோல் பெறுவதற்காக எரிபொருள் நிலையத்துக்கு சென்ற இளம் நபர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை கொக்குவில் - தாவடியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத் 15

# மண்ணெண்ணெய் விலையை மாற்றியமைக்க அரசு முடிவு!

கொழும்பு, ஒக. 11

மண்ணெண்ணெய் 87 ரூபாயிலிருந்து, விலையை மாற்றியமைப்பது குறித்து தற்போது அரசாங்கத்தின் கவனம் உள்ளது - என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர், மீனவர்கள், விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களை இலக்காகக் கொண்டு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு தனியான 15

# சிங்கப்பூரிலிருந்து தாய்லாந்து பயணமாகின்றார் கோட்டாபய!

கொழும்பு, ஒக. 11

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று வியாழக்கிழமை சிங்கப்பூரிலிருந்து தாய்லாந்து செல்லவுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் மிக மோசமான பொருளாதார நெருக்கடியையடுத்து, ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் அலுவலகத்தை ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் கையகப் 15

# தெற்காசியாவிலேயே மிகவும் பலமான அரசியல் வம்சத்தை துரத்தியுள்ளோம்!

## கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் வெற்றி பிரகடனம்!

கொழும்பு, ஒக. 11

இலங்கையர்களான நாங்கள் தெற்காசியாவிலேயே மிகவும் அதிகார பலமும் ஊழல்மிக்கதுமான அரசியல் வம்சத்தை ஆட்சியிலிருந்து துரத்தியுள்ளோம். நாட்டின் அடையாளமாக ஒரு புதிய தலைமுறையை நாங்கள் ஸ்தாபித்துள்ளோம் என்று கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் பிரகடனம் செய்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் வெளியிட்டுள்ள பிகரடன அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

இணையம் மற்றும் புதிய ஊடகம் என்பவற்றுடன் வளர்ந்த புதிய தலைமுறையினரான நாங்கள் வன்முறைகளற்ற நடவடிக்கைகளின் பலத்தை அறிவோம். ஏமாற்றம் அடைந்த இளைஞர்களின் இரத்தத்தில் நனைந்து, மக்கள் எழுச்சிகளின் தோல்விகளை மட்டுமே கண்ட வரலாறு கொண்ட நாட்டில் நாங்கள் மீண்டெ 15

# மனிதாபிமான அடிப்படையிலேயே கோட்டாபயவை அனுமதித்தோம்!

## தாய்லாந்து பிரதமர் அறிவிப்பு

பாங்கொங், ஒக. 11

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மனிதாபிமான அடிப்படையிலேயே தாய்லாந்தில் தங்குவதற்கு இடமளித்துள்ளதாக தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓசா தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் மனிதாபிமான கரிசனைகளின் அடிப்படையிலானது, இது தற்காலிகமாக தங்குவதற்கான அனுமதிதான் என்ற வாக்குறுதியை வழங்கியுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார். 15

# மின்வெட்டு இன்று இல்லை!

கொழும்பு, ஒக. 11

இன்று வியாழக்கிழமையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும், 15

# சீனாவின் கடனைப் பெற்று இலங்கைபோல ஆகாதீர்கள்!

## பங்களாதேஷ் இப்படி எச்சரிக்கை

டாக்கா, ஒக. 11

சீனாவிடம் கடனுதவி பெற்று இலங்கையை போன்று பிரச்னைகளை எதிர்கொள்ளவேண்டாம் என்று வளர்ந்து வரும் நாடுகளுக்கு பங்களாதேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேஷின் நிதியமைச்சர் ஏ.எச்.எம். முஸ்தபா கமல், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சீனாவின் பட்டுப்பாதை திட்ட 15

# விக்னேஸ்வரன் எம். பி. ரணிலுடன் தனி சந்திப்பு

கொழும்பு, ஒக. 11

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனியாக சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாக அறிய வருகின்றது.

சர்வகட்சி அரசு தொடர்பிலும் அதில் பங்கேற்பது குறித்ததான விடயங்களே இந்த 15

# எகிறுகின்றது கொரோனா பலி!

கொழும்பு, ஒக. 11

நாட்டில் கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் 9 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் 60 வயதுக்கு மேற் 15

## இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய தினம் இந்தப் பத்தியைப்படித்தவர்கள் குழம்பிப் போய் இருப்பார்கள். முன்னர் படித்த விடயமாக தெரிந்திருக் கும்.

படித்தபோது ஊர்க்குருவியே குழம்பித்தான் போனார். எப்படி இந்தத்தவறு வந்தது என்பதை கண்டுபிடிக்க நேற்று முழுக்க முயன்றும் முடியவில்லை.

தவறுக்கு வாசகர்கள் பொறுத்தருள்வார்களாக.

ஒன்பதாம் திகதி என்றால் நாட்டில் ஏதோ நடக்கப் போகின்றது என்று மக்கள் நம்பும் அளவுக்கு கடந்த நான்கு மாதங்களும் சம்பவங்கள் நடந்தன.

மே ஒன்பதில் மகிந்தர் போனார். ஜூன் ஒன்பதில் பஸில் போக, ஜூலை ஒன்பதில் கோட்டா போனார். ஓகஸ்ட் ஒன்பதில் ரணிலை அனுப்பிக்காட்டுகின்றோம் என்று சிலர் சவால் விட்டுக்கொண்டிருக்க ரணில் எந்தவித சலனமும் இன்றி தன் காரியங்களை ஆற்றிக்கொண்டிருந்தார்.

ஒன்பதாம் திகதி ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் பாரிய போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தன. அதே வேளை, ஒன்பதாம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் அழைப்பு விடுத்திருந்தார்.

"அரகலய"காரர்களுடன் மிக நெருக்கமாக ஊடாடி வந்த ஒரே அரசியல்வாதி அவர்தான். போராட்டத்தின் பின்னணியில் ஜே. வி. பியும் முன்னிலை சோசலிஷக் கட்சியும் இருந்தாலும், அவர்களைத் தவிர்த்து முன்னணியில் அவர்களுடன் செயல்பட்டவர் சரத் பொன்சேகா மாத்திரமே. அவர் இந்த ஒன்பதாம் திகதிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தபோதிலும் அவரின் இந்த போராட்டத்துக்கும் தமது கட்சிக்கும் தொடர்பு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் இரவு தொலைபேசியில் தொடர்பு கொண்ட தெற்கு நண்பர் ஒருவர், இந்த ஒன்பதாம் திகதியும் சம்பவம் நடந்திருக்கின்றது பார்த்தீரா? என்று கேட்டார்.

நான் ஒன்றும் புரியாததுபோல யோசித்தபோது, அவர் சொன்னார், இந்த ஒன்பதாம் திகதி அறகலய போய்விட்டது என்றார்.

ஒன்பதாம் திகதி போராட்டத்துக்கு மக்கள் முன்னரைப் போல வரவில்லை என்றால், தாங்கள் காலிமுகத்திடலில் இருந்து வெளியேறுவோம் என்று ஏற்கனவே அறிவித்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

எனவே, அவர்கள் எதிர்பார்த்ததுபோல மக்கள் வரவில்லை என்பதால், காலிமுகத்திடலை அவர்கள் முற்றாகக் காலிசெய்துவிடுவார்கள் என்றே நம்பப்படுகின்றது.

இனித்தான் ரணிலின் ஆட்டம் தொடங்கவிருக்கின்றது. சர்வட்சி அரசாங்கம் அமைகின்றதோ இல்லையோ சர்வ கட்சிகளையும் சேர்ந்தவர்களைக் கொண்ட அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பணி இனி எந்தவித தடையுமின்றி நடக்கவிருக்கின்றது என்கிறார் ரணிலுடன் நெருக்கமான ஒருவர்.

இந்த ஒன்பதாம் திகதி கடந்த பின்னரே அமைச்சரவையை விஸ்தரிப்பது என்ற எண்ணத்திலேயே ரணில் இருந்ததாரெனவும், அதாவது போராட்டத்துக்கு மக்கள் திரண்டு வந்தால் அது மக்கள் தன்னையும் விரும்பவில்லை என்றாகிவிடும் என்பதால் அதனைப் பார்த்த பின்னரே முடிவெடுப்பது என்று அவர் நினைத்திருந்தாராம். அந்த ஒன்பது, சுமுகமாகக் கடந்து சென்றிருப்பதால், இனி அந்தப் பணிகள் தடையின்றி நடக்கவிருக்கின்றது என்றார் அவர்.

புதிய சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரும் எந்தவித சலசலப்பும் இருக்கக்கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருக்கும் ஜனாதிபதி ரணில், ஏற்கனவே தன்னேடு நெருக்கம் காட்டிவரும் சிலருக்கு முக்கிய பதவிகளை வழங்கவிருக்கிறார் என்றும், பாராளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதிக்கான தேர்தலில் தனக்கு நேரடியாக ஆதரவு வழங்கிய கட்சிகளின் தலைவர்களுக்கு முக்கிய அமைச்சுக்களை வழங்கவிருப்பதாகவும் தகவல் சொன்ன அந்த பிரமுகர், ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீனின் மக்கள் காங்கிரஸ் என்பனவும் அமைச்சரவையில் இடம்பெறலாம் என்றபோதிலும், ரணிலுக்கு ஆரம்பம் முதலே ஆதரவு தெரிவித்துவரும் அதாவுல்லாவுக்கே அமைச்சரவையில் முக்கிய இடம் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூரில் ஏற்படவிருந்த நெருக்கடியிலிருந்து தப்பிவிட்டபோதிலும், இந்த சீன கப்பல் விவகாரத்தை எப்படி எதிர்கொள்ளப் போகின்றார் என்பதே இன்று ரணில் எதிர்கொள்ளும் முக்கிய நெருக்கடி.!

**- ஊர்க்குருவி.**

# குப்பிழான் கற்கரை விநாயகர் ஆலய தேர்த் திருவிழா சிறப்புற இடம்பெற்றது!



யாழ்ப்பாணம், ஓக. 11

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுப் புதன் கிழமை வெகுசிறப்பாக இடம் பெற்றது.

நேற்றுக் காலை விசேட அபிஷேக பூசை, காலை 8.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து விநாயகப் பெருமான், வள்ளி - தெய்வானை சமேத முருகப் பெருமான், சண்டேஸ்வரர் ஆகிய முத்தெய்வங்களும் திருநடனத்துடன் உள்வீதியில் எழுந்தருளி முத்தேர்களிலும் எழுந்தருளினர்.

சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு ஓதப்பட்டு அடியவர்களால் சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகரா கோஷம் முழங்க, வடம் தொட்டு இழுக்க முற்பகல்-11 மணியளவில் முத்தேர் பவனி ஆரம்பமானது.

தேர்த் திருவிழாவை முன்னிட்டுப் பல ஆண் அடியவர்கள் அங்கப் பிரதட்சணை எடுத்தும், பறவைக் காவடிகள் எடுத்தும், பெண் அடியவர்கள் அடியளித்தும், கற்பூரச் சட்டிகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நேர்த்தியுடன் நிறைவேற்றினர்.

முத்தேர்களும் இருப்பிடம் வந்தடைந்தமையைத் தொடர்ந்து அடியவர்கள் அர்ச்சனை செய்து வழிபாடாற்றினர்.

இந்த ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு அடியவர்களுக்குப் பானங்கள் பரிமாறப்பட்டன. அத்துடன், அன்னதான நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் தேர்த் திருவிழாவில் கிராமத்தவர்கள் மாத்திரமன்றி அயல் கிராமத்தவர்கள் மற்றும் புலம்பெயர் தேசத்தவர்கள் எனப் பல நூற்றுக்கணககான அடியவர்கள் பக்திப் பெருக்குடன் கலந்து கொண்டனர்.

தேர்த் திருவிழாக் கிரியைகளை சிவாகம கிரியா கிரம ஜோதி சிவஸ்ரீ தி.வைத்தீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ வை. கிருஷ்ணானந்த குருக்கள் உள்ளிட்ட சிவாச்சாரியார்கள் சிறப்பாக நிகழ்த்தினர்.

இதேவேளை, இந்த ஆலய மஹோற்சவத்தில் இன்று வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவமும், இன்றிரவு 7.30 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தாக்கல் செய்த 5 மனுக்கள் வாபஸ்!

கொழும்பு, ஓக. 11

காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக் களத்தை விட்டு வெளியேறவும், அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை அகற்றவும் பொலிஸாரால் விடுக்கப்பட்ட உத்தரவுக்கு தடை பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தைக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ஐந்து எழுத்தாணை மனுக்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

நேற்று காலிமுகத்திடல் போராட்டத் தளத்தை விட்டு வெளியேற போராட்டக்காரர்கள் கூட்டாகத் தீர்மானித்ததையடுத்து, எழுத்தாணை மனுக்களை வாபஸ் பெறுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 3ஆம் திகதி காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம், அனைத்து கட்டமைப்புகளையும் அகற்றிவிட்டு, ஓகஸ்ட் 5ஆம் திகதி மாலை 5 மணிக்குள் அந்த இடத்தை விட்டு வெளியேறுமாறு கொழும்பு கோட்டை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் சட்டத்தை கடைபிடிக்க வேண்டும் என்றும், பொது அமைதிக்கு இடையூறு விளைவிப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் கோட்டை காவல்துறையின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பிற்கு செவிசாய்க்கத் தவறும் நபர்கள் சட்ட நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என்றும் கோட்டை பொலிஸார் எச்சரித்தனர்.

இந்த உத்தரவு அமல்படுத்தப்பட்டதை எதிர்த்து ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

(ஐ)

# பங்களாதேஷ் அனுமதி மறுத்ததால் இலங்கை வரும் பாகிஸ்தான் கப்பல்

கொழும்பு, ஓக. 11

சீன இராணுவக் கப்பல் தொடர் பாக சர்ச்சை ஏற்பட்ட நிலையில், தற்போது இலங்கை வரும் பாகிஸ்தான் ஏவுகணை போர்க்கப்பல் தொடர்பாக கரிசனை வெளியிட்டு இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான தைமூர் என்ற ஏவுகணை போர்க்கப்பலுக்கு கொழும்பு துறைமுகத்துக்குள் நுழைய இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. கம்போடிய மற் றும் மலேசிய கடற்படையினருடனான இராணுவப் பயிற்சியின் பின் னர் சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த பாகிஸ்தான் போர்க்கப்பல் பாகிஸ்தானுக்கான தனது முதல் விஜயத்தை மேற் கொள்ளவுள்ளது.

மலேசியாவில் உள்ள லுமுட் துறைமுகத்தில் இருந்து பாகிஸ்தானுக்கு சென்று கொண்டிருந்த கப்பல், பங்களாதேஷின் சத்ரோ கிராம் துறைமுகத்திற்கு நுழைய அனுமதி கோரியது. ஆனால் பங்களாதேஷ் அரசாங்கம் அனுமதி வழங்காததால் கப்பல் இலங்கை வரவுள்ளது.

அதன்படி, இந்த ஏவுகணை போர்க்கப்பல் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Eelanadu
11.08.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆடி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பங்களாதேஷின் எச்சரிக்கை?

சீனாவிடம் கடன் பெற்றால் இலங்கையின் நிலைமை ஏற்படலாம் என்று, பங்களாதேஷ் நிதியமைச்சர் முஸ்தபா எச்சரித்திருக்கின்றார். சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவது தொடர்பில் வளர்ந்துவரும் நாடுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாடுகளுக்கு கடன் வழங்கும்போது, சீனாவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். குறித்த திட்டங்களால், கடன்களை பெற்றுக் கொள்ளும் நாடு, அதன் மூலம் வருமானத்தை ஈட்ட முடியுமா என்பதை அவதானித்தே கடன்களை வழங்க வேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கை விவகாரம் பெருமளவில் சீனாவுக்கும் இலங்கைக்குமான தொடர்புகளின் வழியாகவே நோக்கப்படுகின்றது. சீனாவால் சீரழிந்த நாடு என்றவாறான ஒரு தோற்றமே சர்வதேச அளவில் ஏற்பட்டிருக்கின்றது. குறிப் பாக மேற்குலக நாடுகளின் ஆய்வாளர்களால் இவ்வாறானதொரு பார்வையே முன்வைக்கப்படுகின்றது. இதனையே, தற்போது பங்களாதேஷ் நிதியமைச் சரும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான், இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்த போது, சீனா உடனடியாக உதவி செய்யவில்லை. மிகுந்த எச்சரிக்கையுடனேயே நடந்து கொண்டது. சர்வதேச சமூகத்துடன் இணைந்து உதவி செய்ய விரும்புவதாகவே சீனா அறிவித்தது. இதன் மூலம் மேற்குலக விமர்சனங்களை ஓரங்கட்டலாமென்று, சீனா கருதுவதாக தெரி கின்றது.

உண்மையில் சீனாவின் கடனுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் ஒரு தொடர்பு உண்டுதான். ஆனால், அது மட்டும்தான் காரணம் என்று கூறிவிடமுடி யாது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னால், இலங்கையின் ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளும், முகாமைத்துவ ஒழுங்கின் மையுமே பிரதான காரணங்களாகும்.


ஆனால், சீனாவின் கடன்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பிரதான முதலீடுகளால் இலங்கை வருமானங்களை ஈட்டவில்லை. உதாரணமாக அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் ஆகியவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அம்பாந்தோட்டை துறைமுகம் வர்த்தக நோக்கில் தோல்வியடைந்த ஒரு திட்டமாகும். ஆனால், ‘ஒரு பாதை ஒரு வலயம்’ திட்டத்தின் ஒரு பகுதியாகவே குறித்த அம்பாந்தோட்டை துறைமுகத்தை, சீனா கையகப்படுத்தியது. ஆனால், அதனால் இலங்கைக்கு வேறு நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் மேலும் பல நெருக்கடிகள் ஏற்பட வாய்ப்புண்டு.

வர்த்தக நோக்கில் வெற்றியளிக்காத திட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். உதாரணமாக அம்பாந்தோட்டை துறை முகத்துக்கான குத்தகைக் காலத்தை மீள்நிர்ணயம் செய்ய வேண்டும். ஒரு வேளை ரணில் இதில் வெற்றிபெற்றால், ரணிலால் ஏற்பட்ட ஒரு நெருக்கடியை அவரே தீர்த்து வைத்ததாகலாம். ஏனெனில், அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு வழங்கிய விவகாரமானது, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கண்ணோட்டத்தில் பாரதூரமான ஒன்றாகும். புதுடில்லி நிச்சயம் இதில் சகிப்புணர்வுடன் இருக்காது. இதனை எவ்வாறு கொழும்பு சமாளிக்கப் போகின்றது? ரணிலால் இதனை சமாளிக்க முடியுமா?

எவர் ஆட்சிக்கு வந்தாலும் சில நெருக்கடிகளிலிருந்து தப்பிப்பது மிகவும் கடினமானது. ஒருவேளை தப்பிக்க வேண்டுமானால், சில இறுக்கமான முடிவுகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டும். கொழும்பின் நடுநிலை வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படையில் உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், இலங்கை காலப்போக்கில், பலம்பொருந்திய நாடுகளின் அதிகாரப் பசிக்கான துருப்புச் சீட்டாக மாறுவதை எவராலும் தடுக்க முடியாது. உறுதியான முடிவுகள் எடுக்காவிட்டால், நாடு, அடிக்கடி பொருளாதார மற்றும் அரசியல் குழப்பங்களுக்குள் சிக்கலாம்.

# அவசரகால சட்டம்!

**- அனந்த பாலகிட்ணர் -**



இலங்கையின் காலிமுகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்தியவரான தனிஸ் அலி என்ற நபரை குற்றப்புலனாய்வுத் துறை பொலிஸார் அவர் நாட்டைவிட்டு தப்பி ஓட முயன்றபோது அவர் பயணிக்கவிருந்த சிறீலங்கன் எயர் லைன்ஸ் விமானத்தினுள் வைத்தே மடக்கிப் பிடித்தனர். சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து பலர் கைது செய்யப்பட் டனர். மேலும், பலரை கைது செய்யும் படலம் தொடர்ந்து இடம்பெற்ற வண்ண முள்ளது. இதுதவிர, பல்வேறு இடங்களில் சூட்டுச்சம்பவங்கள் இடம் பெற்று ஆங் காங்கே மனித சடலங்களும் போடப் பட்டுள்ளன.

இலங்கையில் பலதரப்பட்ட அரசியல் காரணங்களுக்காக மக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டங்களை நடத்துவது வழக்கமா கும். ஆனால், நாட்டில் பொருளாதார இடர்பாடு காரணமாக மூன்று மாதங்களுக் கும் மேலாக ஆர்ப்பாட்டமொன்று தலை நகரின் மையப்பகுதியிலேயே இடம்பெற் றமை இது முதல் தடவையாகும்.

தற்போது, நாட்டில் நிலவுகின்ற மிக அசாதாரணமான பொருளாதார சூழ்நிலை, மற்றும் அதனால் ஏற்படக்கூடிய மக்கள் எழுச்சி என்பவற்றை கருத்தில் கொண்டு நாட்டில் அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நிபுணர்கள் இன்னும் சில வாரங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் நடக்கவிருப்பதன் பின்னணியில் இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக குரலெழுப்பி வருகின்ற மக்களை அடக்கும் விதத்திலேயே அவசரகாலச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதென்று இலங்கை அரசை சாடியுள்ளனர்.

இலங்கையர்கள் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து நாட்டின் பொருளாதாரம் மேம்படும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு நேர்மாறாக பொருளாதார நிலவரம் சீரழிந்து நாட்டில் யுத்த காலத்திலும் நிலவியிருக்காத ஒரு மோசமான பொருளாதார நிலவரத்துக்கு மக்கள் முகங்கொடுத்துள்ளனர்.

அவசரகால சட்டம் தற்போது அமுலில் இருக்கின்ற தருணத்தில் யுத்த காலத்தில் இருந்ததைப்போல மீளவும் பொலிஸாருக்கும் ஆயுதப் படையினருக்கும் விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ன. இதன் அடிப்படையில் ஒருவரை எவ்வேளையிலும் கைது செய்து விசாரிக்க முடியும். அத்துடன் ஊர்வலங்கள் மற்றும் பேரணிகள் என்பவற்றையும் கட்டுப்படுத்த முடியும்.

இலங்கைக்கு அவசரகாலச்சட்டம் புதிதானதல்ல. இருப்பினும் இச்சட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு மக்களே என்பது குறிப்பிடத்தக்கது.


இன்றுவரை அன்று நிலவிய அவசரகாலச் சட்டத்தின் தாக்கத்தை வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவித்து வருகின்றனர். தமிழ் அரசியல் கைதிகள் விசாரணைகளின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை மற்றும் காணமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் போன்ற பலதரப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் யாவும் அவசரகாலச்சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் அண்மையில் தமது மனக்கிடக்கையை வெளிப்படுத்துகையில் தற்போது கொழும்பில் மர்மமான முறையில் வெளிப்பட்டு வரும் சடலங்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் சடலங்களோ எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, மீளவும் அவசரகாலச்சட்டம் பொருளாதார ரீதியாக எழக்கூடிய பிரச்னைகளை கையாளும் விதத்தில் கொண்டுவரப்பட்டுள்ளமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசு தனது இரும்புக்கரங்களை பலப்படுத்தும் விதத்திலேயே என்பதை அறிய முடியும்.

இதுதவிர சிங்கப்பூரில் மறைமுக மற்றும் நேரடி அழுத்தங்கள் காரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கிருந்தும் வெளியேறி தாய்லாந்துக்கு செல்லவிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ராஜபக்ஷ குடும்பத்தினரின் விசுவாசி என்ற நிலையிலிருக்கும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரகால நிலையை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபாக்ஷ பாதுகாப்பாக நாடு திரும்பும் விதத்தில் பிரயோகிக்கின்றாரோ என்பதே அரசியல் அவதானிகளின் நியாயமான சந்தேகமாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
வியாபாரத்தை விருத்தி செய்ய நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னையை சரி செய்வீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும். புதிய முயற்சி ஒன்று பலன் தரும்.

**இடபம்**
மதியம் வரை உங்கள் முயற்சிகள் இழுபறியாகும். அதன்பின் நிறைவேறும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். தடைகளைத் தாண்டி ஒரு முயற்சியில் லாபம் காண்பீர்கள்.

**மிதுனம்**
மதியத்திற்கு மேல் உங்கள் முயற்சியில் பின்னடைவு உண்டாகும். கவனமாக செயல்பட வேண்டிய நாள். எந்தவொரு செயலிலும் அவசரம் வேண்டாம். முயற்சிகள் இழுபறியாகும்.

**கடகம்**
நண்பர்களின் ஆதரவுடன் நீண்ட நாள் பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். உறவுகளிடம் உண்டான பிரச்னைகளை பேசி தீர்ப்பீர்கள். முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள்.

**சிம்மம்**
துணிச்சலுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பகைவர்கள் விலகிச் செல்வர். உங்களது உடல்நிலை சீராகும். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள்.

**கன்னி**
முயற்சியில் தடைகளை சந்தித்தாலும் போராடி வெல்வீர்கள். பொருளாதார நிலை உயரும். விலகிச்சென்ற உறவினர்கள் உங்களின் வீடு தேடி வருவார்கள்.

**துலாம்**
உங்களுடைய தேவை களில் ஒன்று நிறைவேறும். எதிர்பாலினத்தினரிடம் எச்சரிக்கையாக இருக்கவும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்ற கடுமையான முயற்சிகள் மேற்கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். பெரியோரின் ஆதரவு உண்டு. சுபச்செலவு கூடும். சிலர் நகை, வாகனம் என்று வாங்கி மகிழ்வீர்கள் உங்களின் தனித்திறமை வெளிப்படும்.

**தனுசு**
குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த வரவு உண்டு. மனக்குழப்பம் தீரும். பிறருக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். செயல்களில் லாபம் காண்பீர்கள்.

**மகரம்**
நேற்றைய செயல் ஒன்றால் சங்கடம் தோன்றும். மனதில் தடுமாற்றம் ஏற்பட்டு செயல்களைத் தள்ளிப் போடுவீர்கள். திட்டமிட்ட செயல்களிலும் எதிர்பார்த்த லாபத்தைக் காண முடியாமல் போகும்.

**கும்பம்**
முயற்சி ஒன்று வெற்றியாகும். உங்கள் நிதிநிலை உயரும். பழைய முதலீட்டில் இருந்து லாபம் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கையால் மகிழ்வீர்கள். எதிர்பார்த்த வரவுகள் உண்டு.

**மீனம்**
உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணியிடத்தில் இருந்த பிரச்னைகளை சரி செய்வீர்கள். மகிழ்ச்சி கூடும். நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் உண்டு.

# சர்வாதிகாரியாக மாறுவேன் முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, ஓக. 11

‘மென்மையான முதலமைச்சர்’ என்று யாரும் கருதிவிட வேண்டாம். போதைப் பொருள் நடமாட்டத்துக்கு துணை போவோருக்கு நான் சர்வாதிகாரியாக மாறுவேன் என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற போதைப் பொருள் தடுப்பு குறித்த ஆலோசனை கூட்டத்தை நடத்தினார்.

தமிழகத்தின் முதலமைச்சராக - சமூக மருத்துவனாக தமிழ்நாட்டு எதிர்காலம் குறித்து சிந்தித்து செயலாற்றக் கூடியவன் நான். காவல்துறை அதிகாரிகளை அழைத்து பூட்டிய அறைக்குள் இதனைப் பேசுவதால் பயனில்லை.

காவல்துறை மட்டுமல்ல, அந்தத் துறையுடன் சேர்ந்து மக்கள் அனைவரும் காவலர்களாக மாறி இந்தப் போதைப்



பாதையை அடைத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டுப்பாடுகளை ஏதோ நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. இவர் ‘மென்மையான முதலமைச்சர்’ என்று யாரும் கருதிவிட வேண்டாம். நேர்மையானவர்களுக்குத்தான் நான் மென்மையானவன். தவறு செய்வோருக்கு - குறிப்பாக போதைப் பொருள் நடமாட்டத்துக்கு துணை போவோருக்கு நான் சர்வாதிகாரியாக மாறுவேன்.

அதற்கான அதிகாரத்தை நான் எங்கும் தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லை. என். டி. பி. எஸ். சட்டத்தில் உள்ள 32ஏ (எ) பிரிவை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பிரிவில் உள்ள, குற்றவாளி ஒரு பொதுப் பதவியில் இருக்கிறார் என்பதும், அந்தக் குற்றத்தைச் செய்வதில் அவர் அந்த அலுவலகத்தைப் பயன்படுத்திக் கொண்டார் என்பதும்” என்ற வாசகத்தைக் குறிப்பாக நினைவில் கொள்ளுங்கள்.

ஆனால், அப்படியொரு நிலைமைக்கு என்னையோ அல்லது உங்களையோ உங்களின் கீழ் உள்ள அதிகாரிகள் தள்ளிவிடமாட்டார்கள், அப்படியொரு சூழ்நிலையை உருவாக்க மாட்டார்கள் என்று இன்னமும் நம்புகிறேன்.

நமக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கு போதைப் பொருள் அறவே கூடாது! அந்த இலக்கை நோக்கி அனைவரும் நடைபோடுவோம். போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம் - என்றும் அவர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

# மத்திய அரசுக்கு எதிராக தமிழகத்தில் போராட்டம்

திருப்பூர், ஓக. 11

விலைவாசி உயர்வு, மின்சார சட்டதிருத்த மசோதா ஆகியவற்றைக் கண்டித்து தமிழகத்தில் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எதிர்வரும் 30ஆம் திகதி மறியல் போராட்டம் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர். முத்தரசன் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு புதன்கிழமை நடைபெற்றது. இந்த சந்திப்பில் மாநிலச் செயலாளர் ஆர்.முத்தரசன் பேசியதாவது:

மத்திய அரசு ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளைத் திணிக்க எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர். பாராளுமன்றத்தில் ஆட்சி நடத்துவதற்கான அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியலமைப்பு சட்டத்துக்கு புறம்பாக செயல்படுகின்றனர்.

அரசியலமைப்பு சட்டம் உருவாக்கியுள்ள நீதிமன்றம், தேர்தல் ஆணையம், ரிசர்வ் வங்கி போன்ற அனைத்தும் நிலைகுலைந்த நிலையில் உள்ளன. ஒரு தனித்தன்மையுடன் இயங்க முடியாமல் கட்டுப்பாட்டுக்கு உள்பட்ட அமைப்புகளாக செயல்பட வேண்டிய நிர்பந்த நெருக்கடிகளாக உருவாகியுள்ளது ஜனநாயகத்துக்கு பேராபத்தாக உருவாகியுள்ளது. மக்கள் கடுமையான துன்பத்துக்கும் நெருக்கடிக்கும் ஆளாகி வருகின்றனர். திருப்பூரில் கட்டுக்கடங்காத நூல் விலை உயர்வுகாரணமாக பின்னலாடைத் தொழில் மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் ஒன்றுபட்டு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் பிரச்னைகளுக்கு எல்லாம் தீர்வு காண வேண்டியது மத்திய அரசின் பொறுப்பாகும்.

வரும் 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் மாற்றம் வேண்டும் என்ற அடிப்படையில் தமிழகத்தில் தி. மு. க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தொடர வேண்டும் என்றும், அதனை பலப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 100 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மத்திய அரசின் விலைவாசி உயர்வு, மின்சார திருத்த மசோதா ஆகியவற்றைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பாக வரும் எதிர்வரும் 30 ஆம் திகதி மறியல் போராட்டங்கள் நடைபெறவுள்ளது. இதில், கட்சி உறுப்பினர்கள் மட்டுமின்றி பொது மக்கள் திரளாகப் பங்கேற்க வேண்டும் - என்றார். (ஐ)

# ரஜினிகாந்தை சீரியஸாக எடுக்க வேண்டியதில்லை!

**வைகோ தெரிவிப்பு**

கோவை, ஓக. 11

“ரஜினிகாந்தை சீரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டாம்” என ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ கூறினார்.

கோவையில் இடம்பெற்ற அவரின் கட்சி நிகழ்வு ஒன்றில் அவர் பேசியபோது, “ம. தி. மு. க. புத்துணர்ச்சி பெற்று தமிழகத்தின் அரசியல் சக்தியை தீர்மானிக்கும் அளவுக்கு உள்ளது. கோவை ம. தி. மு. க. கவின் கோட்டை.

அறிஞர் அண்ணா பிறந்தநாளை ம. தி. மு. க. சார்பில் தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாட உத்தரவிட்டுள்ளோம். ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம் சிந்தனை கொண்ட கட்சிகளை வீழ்த்த தி. மு. கவுடன் இலட்சிய கொள்கைகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம்.

இந்தியாவிலே சிறப்பான ஆட்சியை தி. மு. க. நடத்தி வருகிறது. புதிய திட்டங்கள், செயல்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. மத்திய அரசு உணவுப் பொருட்களுக்கு ஜி.எஸ்.டி விதித்துள்ளதால், பொதுமக்கள் பாதிப்பு அடைந்துள்ளனர். இந்த வரி விதிப்பினால் அதானிகளும், அம்பானிகளும் பாதிப்பு அடைவதில்லை.

பாராளுமன்றத்தில் எதிர்கட்சிகளை பேச அனுமதிக்கு வேண்டுமென குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு சொன்னது சரிதான். இது அவருடைய அரசியல் பண்பை காட்டுகிறது. ஆளும் அரசு அதை ஏற்க வேண்டும்.

அதேபோல், 75 ஆண்டுகள் சுதந்திர தினத்தை முன்னிட்டு வீடுகளில் தேசிய கொடி ஏற்றுவது வரவேற்ககூடியது. நடிகர் ரஜினிகாந்த் சொல்வது யாருக்கும் புரியவில்லை. அது அவருக்கும் புரிவதில்லை. ரஜினிகாந்த் அரசியலுக்கு வருகிறேன் எனக் கூறுகிறார். ஆட்களை சேர்த்ததுக்கு பின்னர், அரசியலுக்கு வரவில்லை என்கிறார். எனவே, நடிகர் ரஜினிகாந்தை சீரியசாக எடுத்துக் கொள்ள வேண்டாம்” என்று அவர் கூறினார். (ஐ)

# மின்சார கட்டண உயர்வுக்கு சபையில் கடும் கண்டனம்!

## விவாதம் நடத்தவும் ஏற்பாடு

கொழும்பு, ஓக. 11

“மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும்.” - என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது மின் கட்டணம் அதிகரிப்பு தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல சபையின் கவனத்தை ஈர்த்தார்.

மின்சார கட்டணத்தை 75 வீதத்தால் அதிகரிக்க இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அனுமதி நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, முதல் 30 அலகுகளுக்கு 264 வீதத்தாலும் 31 முதல் 60 வரையான அலகுகளுக்கு 211 வீதத்தாலும் 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு 125 வீதத்தாலும் மின் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

91 முதல் 120 அலகுகள் வரை 89 வீதத்தாலும் 121 முதல் 180 அலகுகள் வரையான மின் பாவனைக்கு 79 வீதத்தாலும் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ள ணதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

“இன்று முதல் கட்டண அதிகரிப்பு அமுல் எனக் கூறப்படுகின்றது, இதனை ஏற்கமுடியாது, விலை அதிகரிப்பு அமுலாக முன்னர் அது தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும்.

மக்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர், இந்நிலையில் அவர்கள் தற்போது மின்சார கதிரையிலும் அமர்த்தப்பட்டுள்ளனர்.” - என கிரியல்ல சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என சபாநாயகர் அறிவித்தார்.

அதேவேளை, பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மின் கட்டண உயர்வானது, அவர்களின் வாழும் உரிமையை சவாலுக்குட்படுத்தும் நகர்வாகும் என சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அரசியல்வாதிகள் மற்றும் சில அதிகாரிகளின் முறையற்ற நடவடிக்கையால்தான், இலங்கை மின்சார சபை நஷ்டத்தில் இயங்கிகுகின்றது, எனவே, அதன் சுமையை மக்கள்மீது திணிப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல எனவும் குறிப்பிட்டனர். (அ)



# கௌரவமான அரசியல் தீர்வு வேண்டி கிளிநொச்சியில் நேற்று கவனவீர்ப்பு!

கிளிநொச்சி, ஓக. 11

வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி 100 நாட்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தின் 10ஆவது நாள் போராட்டம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது,

முதலாம் திகதி மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

‘கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்’ எனும் தொனிப்பொருளில், வடக்கு-கிழக்கு உட்பட 8 மாவட்டங்களில் சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் கிராம அமைப்புக்கள், விவசாய, மீனவர் சங்கங்கள், பெண்கள் மற்றும் மாணவர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)

# எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தபால் கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 11

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தபால் கட்டணங்கள் திருத்தம் செய்யப்பட உள்ளன.

இதன்படி 15 ரூபாவாக உள்ள சாதாரண கடிதத்துக்கான தபால் கட்டணம் 50 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட தபால் கட்டணம் 45 ரூபாவில் இருந்து 110 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன் 250 கிராம் எடையுள்ள பொருட்களுக்கான சரக்கு கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழில் அரச அலுவலர்களுக்கான எரிவாயு விநியோகத்தில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஓக. 11

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு சுமார் 1000 எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டதாக தெரிவித்து அரச உத்தியோகத்தர்கள் நேற்று புதன்கிழமை யாழ்.பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் உள்ள அரச திறன் விருத்தி மையத்தில் ஒன்றுகூடினர்.

அரச உத்தியோகத்தர்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் பெற்றுத் தருவதாக மாவட்ட செயலகத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகக் கூறி யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இருந்து அரச உத்தியோகத்தர்கள் குறித்த பகுதிக்கு வந்தனர்.

இதன்போது அங்கு வந்த பொதுமக்கள் சிலர் தமக்கு எரிவாயு சிலிண்டர்கள் வேண்டுமெனக் கோரிய நிலையில் அங்கு குழப்ப நிலை ஏற்பட்டது.

இதன்போது அங்கு நின்ற அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே எரிவாயு சிலிண்டர் வழங்கப்படுவதாக தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பொதுமக்கள், தமது பிரதேசங்களில் எரிவாயுக்காக பெயர்களைப் பதிவு செய்த நிலையில் இவ்வாறு பெருமளவு சிலிண்டர்களை அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரே தடவை வழங்குவது எவ்விதத்தில் நியாயம் எனக் கேள்வி எழுப்பினர்.

அது மட்டும் அல்ல. அது குறித்த அரச உத்தியோகத்தர்கள் தமது பிரதேசங்களிலும் எரிவாயுவுக்காக பதிவு செய்துள்ள நிலையில் எவ்வித பதிவு அட்டைகளும் இன்றி அரச உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு எரிவாயு விநியோகித்து திரைமறைவில் கறுப்புச் சந்தையை தோற்றுவிக்க பார்க்கிறார்களா எனக் கேள்வி எழுப்பினர்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த பகுதியில் அரச உத்தியோகத்தர்களுக்கு எரிவாயு விநியோகத்தை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை என தெரிவித்தனர். (அ)

# கடைகளில் மரக்கறி விற்பனைக்கு தடை விதிக்கக் கோரி போராட்டம்!

## செங்குந்த சந்தை வியாபாரிகள் நடத்தினர்

யாழ்ப்பாணம், ஓக. 11

கல்வியங்காடு, செங்குந்த சந்தை வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், யாழ்ப்பாணம் மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை மற்றும் கோப்பாய் பொலிஸ் ஆகியவற்றுக்கு மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆளுகைக்கு உட்பட்ட செங்குந்த சந்தையில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் நேற்றுப் புதன்கிழமை காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சந்தைக்கு வெளியே , சந்தை சுற்றுவட்டப் பகுதிகளில் உள்ள பலசரக்கு கடைகளில் முன்னெடுக்கப்படும் மரக்கறி வியாபாரத்தை தடை செய்ய கோரியே இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சந்தை வியாபாரிகள் தெரிவிக்கையில்-



சந்தைக்கு வெளியே உள்ள பலசரக்கு கடைகளில் மரக்கறி வியாபாரம் நடைபெறுவதால் சந்தைக்குள் வந்து மக்கள் மரக்கறியை கொள்வனவு செய்யாமல் வீதியோரமாக இருக்கும் கடைகளில் அவற்றைக் கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர்.

அதனால் சந்தையின் உள்ளே மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் எம்மிடம் மக்கள் வருவதில்லை. சில கடைகளில் சுகாதாரமின்றி மரக்கறிகளை கொட்டி விற்பனை செய்து வருகின்றனர்.

அத்துடன் வீதியோரக் கடைகளில் மரக்கறி கொள்வனவுக்காக வருவோர் தமது வாகனங்களை வீதிகளில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன.

எமது சந்தை சுற்று வட்டாரத்தில் உள்ள யாழ்.மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றின் ஆளுகைக்குள் உள்ள கடைகளில் மரக்கறி வியாபாரத்தை தடை செய்யக் கோரி இரு சபைகளிடமும் மகஜர் கையளித்துள்ளோம்-என்றார்.

இதேவேளை, சந்தை வியாபாரிகளைவிட வெளியே உள்ள கடைகளில் மரக்கறி வகைகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (அ)

# வாகனங்களில் கடத்தப்பட்ட 19 ஆயிரம் லீற்றர் டீசல் மீட்பு!

## மூவர் கைது!!

கொழும்பு, ஓக. 11

கறுப்பு சந்தையில் விற்பனை செய்யும் நோக்கில் 19 ஆயிரம் லீற்றர் டீசலை கடத்திய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவலொன்றின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து, மீன்களை கொண்டு செல்லும் பாணியில், இரு கனரக வாகனங்களில், தண்ணீர் கொள்கலன்களில் டீசலை சேகரித்தே டீசல் கடத்தப்பட்டுள்ளது.

அம்பாறை நோக்கிச் செல்லும் வழியிலேயே வாகனங்கள், சுற்றிவளைக்கப்பட்டு கைதும், கைப்பற்றலும் இடம்பெற்றுள்ளது.

கைப்பற்றப்பட்ட டீசலின் பெறுமதி 80 லட்சம் ரூபாவுக்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஒரே தடவையில் அதிகளவு டீசல் கைப்பற்றப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். (அ)

# பாராளுமன்றுக்கு ஒரு சட்டம் மக்களுக்கு வேறொரு சட்டமா?

## சபையில் சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, ஓக. 11

பாராளுமன்றத்துக்குள் ஒரு சட்டமும் நாட்டு மக்களுக்கு வேறு சட்டமும் நடைமுறையில் உள்ளதா என்பதை சபாநாயகர் உடனடியாக தெளிவுபடுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்திலும், சபா பீடத்திலும் பொதுச் சொத்துச் சட்டம் செல்லாது என்ற பொய்யான கருத்து நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், குற்றவியல் சட்டம் இந்த சபையில் செல்லுபடியாகாதா என்பதை சபாநாயகர் அறிவிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள அதிகாரங்கள் குறித்து நாட்டையே தவறாக வழிநடத்தும் சம்பவமொன்று நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், 52 நாள் ஆட்சி கவிழ்ப்பு சதித்திட்ட காலப்பகுதியில் சபையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்



பில் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவைப் பேச்சாளர் வழங்கிய கருத்து குறித்து சபாநாயகர் விளக்கம் அளிக்கவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (அ)

# விசுவமடுவில் மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்தவரை மடக்கிப்பிடித்த மக்கள்!

முல்லைத்தீவு, ஓக. 11

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு வள்ளுவர்புரம் பகுதியில் நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிள் ஒன்றிலிருந்து பெற்றோலைத் திருடி விட்டு அதற்கு தீ வைத்த நபரை மக்கள் மடக்கிப்பிடித்துள்ளனர்.

பிடிக்கப்பட்டவருக்கு வயது 16 என்று தெரியவந்துள்ளது.

அவருடைய காலில் தீக்காயம் காணப்படுவதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மக்களால் பிடிக்கப்பட்ட நபர் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வள்ளுவர்புரம் பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலை திருடிய பின் அது தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சத்தம் கேட்டு எழுந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக் கொண்டிருந்ததாகவும், பெற்றோலை எடுத்துக்கொண்டிருந்தவர்கள் தப்பியோடியதாகவும் வீட்டார் தெரிவித்தனர். (அ)



# கிளிநொச்சியில் களவாடப்பட்ட உழவு இயந்திரம் மீட்கப்பட்டது!

கிளிநொச்சி, ஓக. 11.

கிளிநொச்சியில் களவாடப்பட்ட உழவு இயந்திரம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த 07 ஆம் திகதி இராமநாதபுரம் பகுதியில் வசித்த ஒருவரது உழவு இயந்திரம் காணாமல்போயுள்ளது.

எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக கிளிநொச்சி, பரந்தன் நகரப்பகுதியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இனந்தெரியாதோரால் அது கடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் உழவு இயந்திரத்தின் உரிமையாளர் பல இடங்களில் தேடியதுடன் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று விசுவமடு, புன்னைநீராவிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு அருகாமையில் வீதி ஓரமாக குறித்த உழவு இயந்திரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் பொதுமக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

உழவு இயந்திரத்தில் பல உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# காரைநகர் வன்முறைக் கும்பலை உடன் கைது செய்ய நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஓக. 11

காரைநகரில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட கும்பலை 24 மணிநேரத்துக்குள் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட மூவர் வெவ்வேறு குற்றச் சம்பவங்களுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் என்றும் வன்முறையாளர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸ் தகவல்கள் மேலும் கூறின.

கிராம மட்டங்களில் இவ்வாறான வன்முறைகளில் ஈடுபடும் நபர்களே காலப் போக்கில் நகரங்களில் இடம்பெறுகின்ற பாரிய வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்பு படுவதாக அடையாளம் காணப்பட்டு வருவதாகவும் எனவே குறித்த வன்முறையாளர்களைத் தொடர்ந்தும் குற்றச் செயல்களில் ஈடுபட அனுமதிக்கப் போவதில்லை எனவும் பொலிஸ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, காரைநகர் கிழக்கு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் உட்பட்டவர்களுக்கு வாள் காட்டி அச்சுறுத்தியமை தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் இருவரை பிடித்துச் சென்ற நிலையில் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் விடுவிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள் கைது சம்வத்துடன் தொடர்புபட்டு 2 வீடுகள் வன்முறைக் கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிக கட்டணங்கள் அறவீடு; பஸ்களில் திடீர் சோதனை!

கொழும்பு, ஓக. 11

திருத்தப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ் ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளையடுத்து இந்த சோதனை நடத்தப்படுகின்றது.

எனவே, மாகாண பஸ்களில் சோதனையிடுவதற்கு அனைத்து நடமாடும் சோதனை அதிகாரிகளையும் ஈடுபடுத்துமாறு பயணிகள் போக்குவரத்து அதிகாரிகளுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைக்கப்பட்டுள்ள பல நடமாடும் சோதனை அதிகாரிகள் சோதனைகளில் ஈடுபட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவித்தார்.

அபராதம் விதிக்கப்பட்டு, சம்பவங்களில் ஈடுபட்ட சில பஸ் உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பயணிகளிடமிருந்து வசூலிக்கப்படும் கூடுதல் தொகையை திருப்பிச் செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் நிலான் மிரண்டா கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல், மாகாணங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் சுமார் 100 பஸ்களில் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அண்மைய பஸ் கட்டணத் திருத்தத்தை மக்கள் தெளிவாகப் பார்க்கும் வகையில் பஸ்களுக்குள் காட்சிப்படுத்துமாறு நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# தேர்தல் ஆணைக்குழு - கட்சிகள் இடையே பொது இணக்கப்பாடு

கொழும்பு, ஓக. 11

தேர்தல் மற்றும் தேர்தல்களின் கட்டமைப்பில் திருத்தங்களை முன்மொழிய பாராளுமன்ற சிறப்புக் குழு அளித்துள்ள பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை அமுல்படுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுவான உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள முதல் தேர்தலுக்கான வாக்கெடுப்புக்கு முன்னர் அதன் பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றில், தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், முன் கூட்டியே வாக்களிக்கும் வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் வாக்கெடுப்பு நாளில் விசேட வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல், மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

தேர்தல் காலத்தில் அனைத்து ஊடகங்களுக்கும் ஊடக உப-நடவடிக்கைகளை அமுல்படுத்துவது அந்த பரிந்துரைகளில் ஒன்றாகும்.

மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளின் உறுப்பினர்களின் பதவிக் காலம் முடியும் வரை தேர்தல் ஆணைக் குழு வெளியிடும் நெறிமுறைகள் செல்லுபடியாகும் என்றும் அதற்கு சட்டபூர்வ அதிகாரம் வழங்குவதும் அதில் அடங்கும். (அ)

# சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் மீள ஆரம்பம்!



கொழும்பு, ஓக. 11

மசகு எண்ணெய் கப்பல் ஒன்று எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன் பின்னர் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# சீனாவின் ஆதிக்கத்தை தடுக்க தனி தமிழீழம் அமைவதே தீர்வு

## சென்னையில் கூறினார் சிவாஜிலிங்கம்

சென்னை, ஓக. 11

**சீனாவின் ஆதிக்கத்தை தடுக்க தமிழீழ தனியரசு அமைவதே தீர்வு என சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

இலங்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்திலேயே சீன உளவுக் கப்பலுக்கு அனுமதி அளித்துள்ளார். தற்பொழுது இந்திய அரசின் தொடர் அழுத்தத்தால் சீன உளவுக் கப்பலுக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுமதி மறுத்துள்ளார். இருப்பினும், அந்தக் கப்பலின் பயணம் தொடர்கிறது. அது இலங்கைக்கு வருவதில்தான் தாமதமே தவிர, அதன் பயணம் தடைபடவில்லை எனவும் சிவாஜிலிங்கம் கூறினார்.

இலங்கை அரசு தன்னுடைய சர்வதேச நிலைப்பாட்டில் தெளிவில்லாமல் உள்ளது. இந்தியாவோடும் இருப்போம் சீனாவோடும் இருப்போம் என்றால் இந்தியா அதற்கு அனுமதிக்காது. எனவே, இலங்கை அரசு அவர்களுடைய சர்வதேச நிலைப்பாட்டில் தெளிவடையவேண்டும். அத்துடன், இலங்கையின் வடக்கு-கிழக்கில் உள்ள ஈழத் தமிழர்களுக்காக இந்திய அரசு தலையிட்டு அவர்களுக்கென சுதந்திர வாக்கெடுப்பை நடத்த வழிவகை செய்யவேண்டும்.

இன்றைய இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அமைதியான அரசியல் தீர்வு காணும் நோக்கத்தில் இந்திய அரசு அவசரமாகவும் உடனடியாகவும் தலையிட்டு சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்குத் தலைமை ஏற்கவேண்டும்.

இலங்கையின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈழத் தமிழ் மக்களையும் வடக்கு-கிழக்கு பிராந்தியத் தில் உள்ள அவர்களின் தாயகத்தின் ஒருமைப் பாட்டையும் பாதுகாக்கும் நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் எனவும் சிவாஜிலிங்கம் கேட்டுக் கொண்டார்.



அத்துடன் பொது வாக்கெடுப்பு நடத்தப் படும் வரை ஈழத் தமிழர் பகுதிகளை ஈழத் தமிழர் களே ஆளவும் வழிவகை செய்ய வேண்டும். சீனா வின் ஆதிக்கத்தை தடுக்க தனி ஈழமே தீர்வாகும்.

சர்வதேச கண்காணிப்பு நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் இருந்து இலங்கை பொருளாதார உதவியை நாடும் நிலையில் இலங்கைக்கு எந்த உதவியும் செய்யாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு, இந்திய அரசாங்கம் உட்பட சர்வதேச சமூகத்தை வலியுறுத்துகிறோம்.

கடந்த ஆறு மாத காலமாக இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டு பிரச்சினையை இந்தியா உற்றுநோக்கி வருகிறது. இந்திய அரசு, இலங்கையில் சீனாவின் இருப்பை விரும்பவில்லை. இலங்கைக்கு பல நூறு கோடி உதவிகளை இந் தியா அளித்துள்ளதை கருத்தில் கொண்டு இலங்கை அரசாங்கம் செயல்பட வேண்டும் என வும் சிவாஜிலிங்கம் மேலும் குறிப்பிட்டார். (அ)

# அண்மையில் இலங்கை வந்த சீனர்கள் 103 பேருக்கு தொற்று!

கொழும்பு, ஓக. 11

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் பணியாற்றிய சீனப் பிரஜைகள் 103 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்கள் கடந்த 10 நாட் களுக்குள் நாட்டுக்கு வந்தவர்க ளாவர் எனத் தகவல்கள் தெரிவிப்பதாக அந்த சங்கத் தின் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவர்கள் இது வரை, பிரதேச பொது சுகா தாரப் பரிசோதகருக்கு உத்தி யோகபூர்வமாக அறிவிக்க வில்லை என்றும் உபுல் ரோஹன குற்றம்சாட்டியுள்ளார். (அ)

# பாடசாலை மாணவரின் உயிரை பறித்த ஊஞ்சல்!

கொழும்பு, ஓக. 11

மொரட்டுமுல்ல-வில் லோராவத்த பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலை ஒன் றில் நேற்று முன் தினம் பிற் பகல் மாணவர் ஒருவர் திடீர் விபத்துக்குள்ளாகி உயிரிழந் துள்ளார்.

பாடசாலை இடைவேளை யின்போது பல மாணவர்களு டன் குறித்த பாடசாலை மாண வர் இரும்பு ஊஞ்சலில் விளை யாடிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராமல் தவறி விழுந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த மாணவர் பலத்த காயங்களுடன் லுனாவ மருத் துவமனையில் அனுமதிக்கப் பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.

உயிரிழந்த மாணவர் 14 வயதுடையவர் என்பதுடன் பஹல மொரட்டுவ பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நீதவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோ தனைக்காக களுபோவில வைத் தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுமுல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கம்பளை பாடசாலை ஒன்றில் ஆசிரியர்-மாணவன் மோதல்

கொழும்பு, ஓக. 11

கம்பளை நகரில் அமைந் துள்ள பிரபல பாடசாலை ஒன் றின் ஆசிரியருக்கும் மாணவர் ஒருவருக்கும் இடையே ஏற் பட்ட கைகலப்பில் இருவரும் காயமடைந்த நிலையில் கம் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மாணவனின் செவிப்ப றையில் பாதிப்பு ஏற்பட்டுள் ளதால் பரிசோதனை செய்வ தற்காக அவர் பேராதனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

தரம் 13 இல் கல்வி கற்று வரும் குறித்த மாணவன் சம்பவ தினம் காலை தனது தலை முடியை வளர்த்துக்கொண்டு வந்தார் என்று தெரியவருகின் றது. இதன்போது குறித்த ஆசி ரியர் அது குறித்து மாணவ னிடன் வினவியபோது இருவ ருக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசி ரியர், மாணவனின் கன்னத்தில் அறைந்தார் எனவும், இதன் போது குறித்த மாணவன் ஆசி ரியரை அருகேயிருந்த பள்ளத் தில் தள்ளிவிட்டார் எனவும் தெரியவருகின்றது.

இதையடுத்துச் சக ஆசிரி யர்கள் இணைந்து இருவரை யும் கம்பளை வைத்தியசாலை யில் சேர்த்தனர்.

மேற்படி சம்பவம் தொடர் பாகக் கம்பளைப் பொலிஸா ருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய விசார ணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# சீனாவின் நல்லெண்ணத்தைப் பாதிக்காதவாறு கப்பல் விடயத்தில் நடவடிக்கை அவசியமானது!

## வலியுறுத்துகின்றார் டியூ குணசேகர

கொழும்பு, ஓக. 11

சீனக் கப்பல் பிரச்னை தொடர்பில் அமெ ரிக்கா மற்றும் இந்தியாவின் தலையீட்டுக்குப் பின்னணியில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட குழு இருக்கின்றது என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

சீனக் கப்பல் விவகாரத்தில் ஜனாதிபதியும் பிரத மருக்கும் இடையில் சீனாவின் நல்லெண்ணத்தை பாதிக் காத வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பிரச்னை ஏற்பட்டால் அதனை இரு நாடுகளும் இணைந்து தீர்த்துக்கொள்ளவேண்டும்.

வேறு தரப்பினர் தலையிட வேண்டிய அவசிய மில்லை. அணிசேரா கொள்கையின்படி இலங்கை செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# நல்லூரில் போலி நாணயத்தாள் வழங்கி பொருட்களை வாங்கிய ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 11

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய சூழலில் உள்ள கடைகளில் போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களை வழங்கி பொருள்கள் வாங்கிய ஒருவர் பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 2 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களுடன் 3 கடைகளில் வழங்கிய 3 ஆயிரம் ரூபாய் நாணயத்தாள் களும் கைப்பற்றப்பட்டுள்ளன.



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா இடம் பெற்று வருகிறது.

ஆலய திருவிழாவின் முதல் மூன்று நாள்களில் மூன்று வெவ்வேறு கடைகளுக்குச் சென்ற ஒருவர், போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களை வழங்கி கச்சான், பழங்களை 200 ரூபாய்க்குள் வாங்கி மிகுதிப் பணத்தை பெற்றுச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அவை தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமை பொலிஸ் பரி சோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையி லான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெ டுத்தனர்.

நல்லூரடியைச் சேர்ந்த 27 வயது டைய நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் விசாரணைகளின் பின் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட் டார்.

சந்தேக நபருக்கு போலி நாணயத்தாள்களை அச் சிட்டு வழங்கியவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன் னெடுக்கப்படுவதாக பொலிஸார் கூறினர். (அ)

# கழிவு தேயிலையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 11

பாவனைக்கு உதவாத கழிவு தேயிலையை கொண்டு சென்ற லொறியொன்று பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரி வித்தனர்.

தேயிலைக்காக வழங்கப்படும் உயர்தர சான்றிதழ் களுக்கான சின்னங்கள் முத்திரையிடப்பட்ட 34 பைக ளிலேயே இவ்வாறு கழிவுத் தேயிலை அடைக்கப் பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, தேயிலைச் சபையின் அதிகாரிகளுடன் இணைந்து பொலிஸார் கம்பளை-சுதந்திர மாவத் தைப் பகுதியில் வைத்து குறித்த லொறியை மடக்கிப் பிடித்தனர். உடுநுவர-வெலம்பொட பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட இந்த கழிவுத் தேயிலையுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# காவிரிநதி நீர் விவகாரத்தில் மேகேதாட்டு அணை

## மேலுமொரு முட்டுக்கட்டையாகின்றதா?

**நியூசிலாந்து சிற்சபேசன்**

அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை என்பார்கள். தொலைவு எப்போதுமே அவாவகூடியது. அருகாமை அச்சம் ஏற்படுத்தக்கூடியது. அருகாமையைப் பகிர்ந்துகொள்வது சவாலானது. அருகாமையைப் பகிர்ந்து கொள்ளும்போது, இரண்டு மனிதர்களிடம் பிரச்சினை வரலாம். இரண்டு மாநிலங்களிடம் பிரச்சினை வரலாம். இரண்டு நாடுகளிடம் பிரச்சினை வரலாம். அதற்கான சான்றுகளுக்குப் பஞ்சமில்லை. தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களிடையேயான காவிரிநதிநீர் பங்கீடு விவகாரமும் அதற்கு உதாரணமாகும்.

தமிழகத்திற்கும் கர்நாடாகாவுக்கும் இடையிலான காவிரிநதிநீர் பங்கீடு தொடர்பான முரண்பாடு இன்றுநேற்று ஆரம்பமானதல்ல. சுமார் நான்கு சகாப்தங்களுக்கு மேலாக தொடருகின்றது. அதனை, மேகேதாட்டு அணை விவகாரம் தற்போது உசுப்பேத்தியிருக்கின்றது.

காவிரிநதிநீர் பங்கீடு தொடர்பில் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களிடையே ஐம்பதுவருட ஒப்பந்தம் 1924ல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தமிழ்நாட்டுக்கு 350 டி.எம்.சி வரையான அளவுகளில் தண்ணீர் கிடைத்தது. அந்த ஒப்பந்தம் 1974ல் முடிவடைந்தது.

அதனை நீட்டிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இரண்டு மாநிலங்களிடையேயும் பலவருடங்களாக நடைபெற்றன. ஆனால், எத்தகைய உடன்பாடும் ஏற்படவில்லை. அதனால், மத்தியஸ்தத்துக்குச் செல்ல வேண்டிய நிலை உருவாகியது.

1990ல் காவிரி நடுவர்மன்றம் அமைக்கப்பட்டது. தமிழகத்துக்கு 205 டிஎம்சி ஒதுக்குவதாக நடுவர் மன்றம் 1991ல் இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது. .

காவிரிநடுவர் மன்றத்தின் தீர்ப்பு வெளியாகியபோது, கர்நாடகாவில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் ஏற்பட்டன. தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இடைக்காலத்தீர்பை அமுல்படுத்துவதிலேகூட இழுத்தடிப்புக்களை மேற்கொள்வது கர்நாடகத்தின் வாடிக்கையாகியது. அதனால், காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பை அமுல்படுத்தக் கோருவதே தமிழ்நாட்டுக்கு சுமையாகிவிடுகின்றது. சிலவேளைகளில், உச்சநீதிமன்றத்தை நாடவேண்டிய சூழ்நிலைகூட ஏற்படுகின்றது. உச்சநீதிமன்றம் வழங்குகின்ற தீர்ப்பை அமுல்படுத்துவதுகூட சவாலாகிவிடுகின்றது. அதிலிருந்தும் கர்நாடகம் தந்திரோபாயமாகத் தப்பிவிடுகின்றது.

காவிரி நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பு 2007ல் வழங்கப்பட்டது. அதன்பிரகாரம், தமிழ்நாட்டுக்கான காவிரிநீர்ஒதுக்கீடு 192 டிஎம்சி அளவாகக் குறைக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர், விவாகாரம் மேலும் சிக்கலாகியது. கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களுமே உச்சநீதிமன்றத்தை நாடின. அது தொடர்பிலான விசாரணைகள் பதினொரு ஆண்டுகள் நடைபெற்றன. மேல்முறையீட்டு மனுவின் மீதான தீர்ப்பு 2018ல் வழங்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டுக்கான ஒதுக்கீடு 177.25 டிஎம்சி அளவுக்கு மேலும் குறைக்கப்பட்டிருந்தது.




உணவளிக்கும் உழவர்க்கெல்லாம் கண்ணாக, பண்பு உயர்ந்த தமிழ் நாட்டின் செல்லப் பெண்ணாக எனப் பாடல்வரிகளில் வருவதுபோல காவிரி தமிழ்நாட்டின் பெருமைக்



குரிய பொக்கிஷமாகும். அண்ணளவாக, ஒன்றரைக்கோடி மக்கள் குடிநீர்த் தேவைக்காக காவிரிநீரைச் சார்ந்திருக்கின்றனர். காவிரிநீர் தடைப்படுகின்றபோது இருபதுக்கும் மேற்பட்ட மாவட்டங்களின் குடிநீர் ஆதாரம் கேள்விக்குள்ளாகின்றது. சுமார் முப்பதுலட்சம் ஏக்கர் விவசாய நிலம் காவிரிநீரை நம்பியிருக்கின்றது. காவிரிநீர் தடைபடுகின்றபோது பயிர்ச் செய்கை பாதிக்கப்படுகின்றது. காவிரி நீர் உரியநேரத்தில் கிடைக்காமையினால் குறுவை, சம்பா சாகுபடிகள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றன.

அதனால், காவிரிப்படுகை சொல்லொணாத் துன்பங்களை எதிர்கொள்கின்றது. விவசாயிகள் கடன்சுமையில் வீழ்கின்றனர். அதனால் தற்கொலைகள் அதிகரிக்கின்றன. நடந்தாய்வாழி எனப் போற்றப்படுகின்ற காவிரியற்றங்கரை சமூகத்திலே கண்ணீர் பெருக்கெடுக்கின்றது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவிரிநீர் பங்கீடு தொடர்பில் தொடர்ந்து ஆட்சிபீடமேறிய மாநில மற்றும் ஒன்றிய அரசியல் கட்சிகள் ஆத்மார்த்தமான முயற்சிகளை முன்னெடுக்கவில்லை. அதனாலேயே மாநிலங்களிடையேயான உறவு பிசிறுகின்றது.

காவிரிவிவகாரத்தில், நடுவர்மன்றத்தில் தீர்ப்பாகிய நீரைக்கூட பெற்றுகொள்ள முடியாமை தமிழ்நாட்டின் துர்ப்பாக்கியம். தமிழ்நாட்டுக்கு நீரைத் திறந்துவிடாமல் இருப்பதற்கான முன்னெடுப்புக்களே கர்நாடகத்தின் குறிக்கோள். தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் மேகேதாட்டு அணை நிர்மாணத் திட்டத்தையும் அந்தவகையிலேயே பார்க்க முடிகின்றது.

இவ்வாறாக அணைகட்டி நீரின் ஓட்டத்தையும், தமிழ் நாட்டுக்கு வழங்கும் நீரின் அளவையும் குறைக்கின்ற கர்நாடகத்தின் முயற்சி புதியதல்ல. இதற்கு முன்னரும் 1970களின் பின்னரைப்பகுதிகளில் கபிணி, ஹேரங்கி, ஹேமாவதி, யாகாச்சி, ஸ்வர்ணாவதி ஆகிய ஐந்து அணைகளை காவிரி மற்றும் துணை நதிகளில் கர்நாடகம் கட்டியிருக்கின்றது.


மேகேதாட்டு அணை, சுமார் 68 டிஎம்சி கொள்ளளவையுடைய நீர்த்தேக்கத்தைக் கொண்டதாகவே திட்டமிடப்படுகின்றது. அதிலே நீர்மின்சாரம் தயாரிக்கும் திட்டமும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டத்தை அமுல்படுத்துகின்ற பட்சத்தில் தமிழ்நாட்டுக்குத் திறந்துவிடப்படுகின்ற நீரின் அளவு கணிசமாக குறையும் எனக் கணிக்கப்படுகின்றது.

கூடவே, சூழல்பாதிப்புக்களும் ஏற்படுமெனச் சொல்லப்படுகின்றது. மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் காடுகள் அழிக்கப்படுவது ஏற்கெனவே அதிகரித்திருக்கின்றது. புதிய அணை நிர்மாணிக்கும்போது மேலும் காடுகள் அழிக்கப்படலாம். அதனால் வனவிலங்குகள் மற்றும் பறவைகள் உயிரிழக்கலாம். இவ்வாறான செயற்பாடுகளின் விளைவுகள் பாரதூரமானவை. புவிவெப்பமடைவதிலும் பங்களிக்கின்றன.

தற்போதைய நிலவரப்படி, காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்டப்போவதாக கர்நாடக அரசின் அறிவிப்பு உள்ளது. மறுவளத்தில், மேகேதாட்டு அணை நிர்மாணத்துக்கான அனுமதியை ஒன்றிய அரசு வழங்கக்கூடாது என்னும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. அத்துடன், உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கையும் தாக்கல் செய்துள்ளது.

நீதிமன்றம் மற்றும் காவிரிநடுவர் மன்றத்தின் தீர்ப்புக்களை அமுல்படுத்துவதில் உள்ள சவால்கள், பலனற்ற பேச்சுவார்த்தைகள், அறமற்ற அரசியல் தலையீடு ஏற்படுத்துகின்ற பக்கச்சார்பு, ஒன்றியஅரசின் நடுநிலைமை குறித்த அய்யம், மாநில அரசியல் வெட்ப தட்பங்கள் என கடந்தகால வரலாறுகள் நம்பிக்கைகளை நறுக்குகின்றன.

ஏலவே, காவிரி நடுவர்மன்றத்தின் இறுதித் தீர்ப்பின்பிரகாரம் கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடுவதில்லை. அதனால், மத்தியஸ்தத்துக்கு அலைவதே தமிழ்நாட்டுக்கு வாடிக்கையாகி விட்டது. தற்போது, மேகேதாட்டு அணை காவிரிநதிநீர் விவாகரத்தில் மேலுமொரு முட்டுக்கட்டையாகின்றது.



# அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திலுள்ள தமிழ் மொழியுரிமை கண்டுகொள்ளப்படாததேன்?

**- த. மனோகரன்**



**அரசியலமைப்பில் இந்தியாவினால் இந்நாட்டில் திணிக்கப்பட்டதாக தமிழர் தரப்பினர் சிலரும் கூறும் குறித்த திருத்தத்தின் மூலமே இலங்கைத் தமிழருக்கு நாட்டின் தேசிய இனத்தவரென்ற அந்தஸ்தும் அதேபோல் தமிழர்களது மொழியுரிமை உறுதிப்படுத்தப்பட்டதும் என்பதை ஏற்றேயாக வேண்டும்.**

இன்று இலங்கையிலும் இலங்கை தொடர்பாக உலக அரங்கிலும் பேசு பொருளாகவுள்ள இலங்கையின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பாக ஆராய வேண்டும். கவனம் செலுத்த வேண்டும்.

இந்நாட்டில் நிலவிய இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணுமுகமாக அண்டை நாடான இந்தியாவின் அழுத்தத்தின் பேரில் இருநாடுகளுக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் மேற்க்கொள்ளப்பட்டது.

இத்திருத்தம் இலங்கை அரசின் விருப்புடனோ அல்லது பாதிப்புக்குள்ளான தமிழர்தரப்பின் கோரிக்கைகமையவோ உருவாக்கப்பட்டதல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து கொண்டிருந்த இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓரளவாவது தீர்வு காண இந்தியா தன்னிச்சையாக மேற்கொண்ட தீர்மானமே இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின்படியான பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தமாகும். இலங்கைத் தமிழர்களது அகிம்சைப் போராட்டதிதின் மூலமோ ஆயுதப் போராட்டத்தின் மூலமோ மேற்கொள்ளப்பட்டதல்ல என்பதால் சில தமிழர் தரப்பு இன்றும் குறித்த அரசியலமைப்புத் திருத்தத்திலுள்ள விதிகளை நடைமுறைப்படுத்துவதில் அக்கறை அற்று இருப்பது போல், தமது விருப்பத்திற்கு மாறாக இந்தியாவால் திணிக்கப்பட்ட குறித்த திருத்த விதிகளை செயற்படுத்துவதில் அக்கறையின் றி உதாசீனமாக இலங்கையின் அரச தரப்பும் பெரும்பான்மை இனத்தவர்களும் உள்ளமையைக் காணலாம்.

இதுவே யதார்த்த நிலை. இன்று உலக அரங்கில் இந்தியாவும் ஏனைய பல பொறுப்பு வாய்ந்த அமைப்புக்களும் இலங்கை அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி தமிழ் மக்களது நலனைப் பேண வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றன. 1987 இல் இருநாட்டு ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படியான மாகாணசபை அமைப்பு அதற்கான தேர்தல் நடத்துவது தொடர்பாகவே இன்று பெரிதாகப் பேசப்படுகின்றது.

நாட்டிலே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தி மாகாண சபைகளைச் செயற்படுத்திவிட்டால் இனப்பிரச்சனைகள் தீர்ந்துவிடும். தமிழர்கள் தமக்குரிய உரிமைகளைப் பெற்று விடுவார்கள் என்று நமது தமிழர்கள் நம்புவது போல் ஆட்சியாளரும் குறித்த தேர்தலை நடத்திவிட்டால் இந்தியாவினதும், சர்வதேசத்தினதும் வாயை மூடிவிடலாம் என்று நம்புகின்றனர்.

இதுவே உண்மைநிலைமை. ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அரசியலமைப்புத் திருத்தம் உருவாக்கப்பட்டு முப்பத்திநான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அந்த திருத்தத்திலுள்ள பல அடிப்படை விடயங்களை, தமிழர்களது தேவையைச் சகல தரப்பினரும் மறந்து விட்டனரோ அல்லது மறைத்து விட்டனரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. குறித்த ஒப்பந்தத்தின்படியான பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் 1956 ஆம் ஆண்டில் இலங்கைப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட நாட்டின் ஒரே அரசகரும மொழி சிங்களம் மட்டுமே என்ற சட்டமும் அதைத் தொடர்ந்து 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே அரசகரும மொழி என்ற சட்ட விதிகளும் வழுவிழக்கச் செய்யப்பட்டமையையும் அரசியலமைப்பில் நாட்டின் தேசிய மற்றும் அரசகரும மொழிகள் தொடர்பாகப் புதிய சட்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டமையையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு இன்று நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் அதனோடிணைந்த பதினாறாவது திருத்தத்தின் மூலம் இலங்கையின் தேசிய மற்றும் அரச கரும மொழிகள் தொடர்பான சட்டங்கள் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளன. அதன்படி இலங்கை முழுவதற்குமான தேசிய மொழிகளாக சிங்களமும், தமிழும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதன் மூலம் நாட்டில் தமிழையும், சிங்களத்தையும் தாய் மொழிகளாகக் கொண்ட இரு சமூகத்தவரும் இலங்கையின் தேசிய இனத்தவர்களென்று ஏற்று அங்கீகரிக்கபட்டுள்ளனர்.

தமிழ் மொழிப் புறக்கணிப்பின் மூலம் நாட்டின் அந்நியராக்கப்பட்ட தமிழர்களுக்கு நாட்டின் தேசிய இனத்தவரென்ற அங்கீகாரம் கிடைத்தமை இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் படியான அரசியலமைப்பின் குறித்த திருத்தத்தின் மூலம் என்பதை மறந்துவிடக் கூடாது. அவ்வாறே சிங்களம் மட்டுமே நாட்டின் ஒரே அரச கரும மொழியென்ற சட்டவிதி நீக்கப்பட்டு நாடு முழுவதற்கும் சிங்களத்துடன் தமிழும் அரச கரும மொழி என்ற விதி ஏற்கப்பட்டு சட்டமாக்கப்பட்டதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதன்மை நிர்வாக மொழி தமிழென்றும் ஏனைய ஏழு மாகாணங்களின் முதன்மை நிர்வாக மொழி சிங்களமென்றும் வரையறை செய்யப்பட்டதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங் கள் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அவர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்பதும் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் நாட்டின் எந்தப் பகுதியிலும் தமிழர் ஒருவரோ சிங்களவரொருவரோ தான் விரும்பும் எந்தவொரு மொழியிலும் அரசாங்கத்துடனான தொடர்புகளையும் கருமங்களையும் ஆற்றிக்கொள்ள முடியும் என்ற உரிமையும் சட்டரீதியாக உரித்தாக்கப்பட்டுள்ளது. மொழிதான் ஒரு மனிதனின் மூச்சு என்பர். அரசியலமைப்பில் இந்தியாவினால் இந்நாட்டில் திணிக்கப்பட்டதாக தமிழர் தரப்பினர் சிலரும் கூறும் குறித்த திருத்தத்தின் மூலமே இலங்கைத் தமிழருக்கு நாட்டின் தேசிய இனத்தவரென்ற அந்தஸ்தும் அதேபோல் தமிழர்களது மொழியுரிமை உறுதிப்படுத்தப்பட்டதும் என்பதை ஏற்றேயாக வேண்டும்.

இன்றைய நிலையில் மாகாண சபைக்கான தேர்தல் எப்போது நடக்கும், அதில் போட்டியிடுவது யார், யாருக்கு என்ன பதவி என்று சிந்திக்கும் தமிழ் அரசியல்வாதிகளில் எவராவது அவர்கள் இன்றைய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகட்டும் மாநகர, நகர, பிரதேச சபைகளிலுள்ள தமிழ் உறுப்பினர்களாகட்டும் அல்லது சமூக நலன் கருதிச் செயற்படுவதாகக் கூறிக்கொள்ளும் எந்தவொரு அமைப்பாகட்டும்.

பொருப்புள்ள தமிழ்ப் பொதுமக்களாகட்டும் எவராவது அரசியல மைப்பில் தமிழ் மொழிக்கு வழக்கப்பட்டுள்ள இந்திய அரசால் பெற்றுகொக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரின் மொழியுரிமை தொடர்பில் அக்கறை செலுத்துகின்றனரா அல்லது குரல் கொடுத்து அவ்வுரிமையை நடைமுறைப்படுத்தி தமிழர்களின் நியாயமான, உரித்துடைய மொழியுரிமையைப் பேணி, நடைமுறைப்படுத்த முயலவில்லை. மொழியுரிமை தொடர்பில் உதாசீனமாகவேயுள்ளனர். இதுவே உண்மை யதார்த்த நிலையும் அதுவே இதை எவராவது மறுக்க முடியுமா?

ஒரு சிலருக்கு அதாவது தமிழர்களுக்கு மாகாண சபைகளில் உறுப்புரிமை பெறுவதற்காக உருவாக்கப்பட்டதல்ல மாகாண சபைகள். கல்வியறிவற்ற, பகுத்தறியும் ஆற்றலற்ற பதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மாகாண சபைகள் வேண்டும் அதற்குத் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே பலர் அதிலும் தமிழர்கள் உள்ளனர்.

மாகாண சபைத்தேர்தல் நடத்தி மாகாண சபைகளை இயங்கச் செய்தால் மட்டுமே பதின்மூன்றாவது திருத்தத்தின் இலக்கை அடைந்து விட முடியாது. பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ள மொழியுரிமை, கல்வியுரிமை உட்பட பலவற்றையும் நடைமுறைப்படுத்துவதன் மூலமே அத்திருத்தத்தின் உண்மையான, எதிர்பார்த்த நோக்கை அடைய முடியும்.


சிறுபான்மையினத்தவர்கள் குறிப்பாகத் தமிழர்கள் அதிக உரிமைகளை, அங்கீகாரத்தைப் பெற்றுவிடக்கூடாது என்று அன்று முதல் இன்றுவரை சிந்தித்துச் செயற்படும் இனவெறிப் பேரினவாத சக்திகள் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் எரிச் சல் அடையலாம் அது அவர்களது மனநிலை ஆனால் தமிழ்த் தரப்பும் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தில் தமிழர்களுக்கு எதுவித பயனுமில்லை என்று கூறுவதன் நோக்கமென்ன? இன்றைய தேவைகளில் முக்கியமானது அரசியலமைப்பில் இன்று வழங்கப்பட்டுள்ள தமிழ் மொழிக்கான நடைமுறை உரிமையைச் செயற்படுத்துவதே.


அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது தமிழர் தரப்பில் தவிர்க்க முடியாத கடமை, பொறுப்பு. தமிழர்கள் தனிப்பட்ட அரசி யல் கொள்கை வேறுபாடுகளைக் கடந்து மொழியுரிமையைச் செயற்படுத்த சிந்திக்க வேண்டும்.

**(கட்டுரையாளர்: ஓய்வுபெற்ற கைத்தொழில் நீதிமன்ற பதிவாளர்)**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 
i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................
ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.
.........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.
i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.
..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.
.........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?
..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?
..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |




27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.
.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?
.....................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?
.....................................................
(30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?
1)    2)    3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி   2) இரணைமடுக்குளம்   3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்   2) உதிப்பு   3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்   2) வாளேந்திய சிங்கம்   3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976   2) 1851   3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு   2) இறப்பர், தாழம்பூ   3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6   2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130   2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 1l 100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190   2) 100   3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1   **31.** 2   **32.** 3
**33.** 2   **34.** 3   **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 11.08.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 11.08.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வடக்கு-கிழக்கில் கூட்டுறவுத்துறையை மேம்படுத்த புலம்பெயர் உறவுகள் இதய சுத்தியுடன் பங்களிப்பு

## சமாச தலைவர் லோகநாதன் பாராட்டு

அம்பாறை, ஓக. 11

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவுத்துறை மூலமாக எமது மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நெதர்லாந்து, கனடா, சுவிஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் உறவுகள் மிகக் காத்திரமான பங்களிப்புகளை இதய சுத்தியுடன் வழங்கி வருகின்றனர் என்று கல்முனை-அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.**

காரைதீவில் சுய தொழில் முயற்சியாளர்களுடன் கடந்த ஒரு மாதமாக பல சந்திப்புகளை மேற்கொண்டு வேலை திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்ற லோகநாதன் ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் கூட்டுறவுத்துறை பிரகாசிக்கின்றது. அங்கு உள்ள மக்கள் கூட்டுறவுத்துறையின் நன்மைகளை அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவுத்துறை மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த புலம்பெயர் உறவுகள் அர்ப்பணிப்புடன் முன்வந்து உள்ளார்கள். ஏராளமான வேலைத் திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்புகளுடன் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன.

அரசாங்கத்திடம் நாம் நிதி கேட்கவில்லை. தார்மீக ஆதரவை அது வழங்கினால் போதும். அதற்காக அரசாங்க அலுவலகங்கள் தூங்கிக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது.

அம்பாறை மாவட்டத்தை பொறுத்தவரை நாவிதன்வெளி, சொறிக்கல்முனை, பாண்டிருப்பு, கல்முனை, மல்லிகைத்தீவு என்று பல பிரதேசங்களிலும் வேலை திட்டங்களை ஆரம்பித்து இருக்கின்றோம். அடுத்த வேலைத்திட்டத்தை காரைதீவில் முன்னெடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்து வருகின்றோம். எமது வேலை திட்டங்களில் சுய தொழில் ஊக்குவிப்பு, சேமிப்பு ஆகியன பிரதான அம்சங்களாக இருக்கின்றன-என்றார். (அ)

# கல்முனை கல்விப் பணிப்பாளராக எம்.எஸ் சஹுதுல் நஜீம் கடமையேற்பு

அம்பாறை, ஓக. 11



கல்முனை வலய கல்வி பணிப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த எம்.எஸ் சஹுதுல் நஜீம் நேற்று தனது கடமைகளை கல்முனையில் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்று கொண்டார்.

கல்முனை மற்றும் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகங்களின் பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர், கணக்காளர், வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள், கல்முனை கல்வி வலய அதிபர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய மாணவருக்கு கற்றல் ஏடுகள் வழங்கல்

அம்பாறை, ஓக. 11



அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு "மாணவர் மகிமை" வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கற்றல் ஏடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பாதிக்கப்படும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு கரம் கொடுக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் 2022 கல்வியாண்டில் மாணவர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத பாட நூல்கள் வழங்கப்பட்டன.

இதற்கமைய கல்வி வெளியீட்டு திணைக்களத்தில் இருந்து குறைவாக கிடைக்கப் பெற்ற தரம் 5 ஆங்கில பாட நூல்கள் மற்றும் தரம் 2 கணிதம் செயல்நூல் ஆகிய பாடப் புத்தகங்கள் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பினால் பிரதி செய்யப்பட்டு புத்தகங்களாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் எஸ் ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் தலைவர் ஐ.எம்.நிஸ்மி, அமைப்பின் செயலாளர் ஏ.புஹாது, ஆகியோர் கலந்துகொண்டு பாட நூல்களை கையளித்தனர். (அ)

# மட்டக்களப்பு உயர்தர மாணவர்களின் சைக்கிளோட்ட விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, ஓக. 11




எரிபொருள் பிரச்சினையை மையப்படுத்தி பாடசாலைக்கு ஆசிரியர்களையும், மாணவர்களையும் வரவழைத்தல் எனும் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் மட்டக்களப்பு வின்சென்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலைகளின் கல்வி பயிலும் 2021-2022 ஆண்டுக்கான உயர்தர மாணவர் தலைவர்களின் ஏற்பாட்டில் மாபெரும் விழிப்புணர்வு சைக்கிளோட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் தலைமையிலான நிர்வாகமும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் , வின்சன்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் தலைமையிலான நிர்வாகத்தினர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் அனுசரணையுடன் விழிப்பூட்டும் சைக்கிளோட்டம் கடந்த திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சைக்கிளோட்டம் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் நுழைவாயிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி ஊடாக மட்டக்களப்பு திருமலை வீதியில் கோப்பின் தனியார் விடுதிவரையும் சென்று அங்கிருந்து மீண்டும் பிரதான வீதி வழியாக வந்த டைந்து ரெலிக்கொம் வீதியூடாக ஜீ.வீ தனியார் வைத்தியசாலை வரையும் சென்று மீண்டும் பிரதான வீதி வழியாக பாடசாலையில் நிறைவடைந்தது.

இவ்விழிப்புணர்வு சைக்கிளோட்டத்தில் 100 இற்கு மேற்பட்ட உயர்தர மாணவர்கள், சாரண மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றியுள்ளனர்.

இந்த விழிப்புணர்வால் பாடசாலைக்கு சைக்கிளில் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் வரவு அதிகரிக்கப்படலாம் என பாடசாலைகளின் அதிபர்கள் எதிர்பார்க்கின்றார்கள். (அ)

# நஜீமிற்கு பிரியாவிடை

அம்பாறை, ஓக. 11



கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்ற எம்.எஸ்.சஹுதுல் நஜீமிற்கு சம்மாந்துறையில் நேற்று முன் தினம் பிரியாவிடை நடத்தப்பட்டது.

சம்மாந்துறை வலய கல்வி கல்வி சார் உத்தியோகத்தர்கள் மற்றும் அதிபர்கள் ஏற்பாடு செய்த இவ் வைபவம், சம்மாந்துறை தாருஸ்ஸலாம் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஹைதர் அலி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலரும் அவரது சேவைகள் பற்றி பாராட்டிப் பேசினார். (அ)

# நெற்செய்கை நடவடிக்கை தற்காலிக இடைநிறுத்தம்

அம்பாறை, ஓக. 11

நெற் செய்கை பண்ணுவதற்காக சிவில் பாதுகாப்புப் படையினருக்கு அனுமதி வழங்கியிருந்த பொத்துவில் - கிரான்கோவை விவசாய காணியில் செய்கை பண்ணுவதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

இது தொடர்பான உயர் மட்ட கலந்துரையாடல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, செய்கை பண்ணுவதற்கு துப்புரவு செய்யப்பட்ட காணிகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிரான்கோவை விவசாயக் காணியை அதன் உரிமையாளர்களுக்கு மீள வழங்குவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், சிவில் பாதுகாப்பு படையினருக்கு செய்கை பண்ணுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# அமெரிக்காவுக்கு எதிராக வெனிசுலாவில் பேரணி!

## ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்



கராக்கஸ், ஓக. 11

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் மற்றும் சொத்துக்கள் முடக்கத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான வெனிசுலா மக்கள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தலைநகர் கராக்கஸில் பெரும் கண்டனப் பேரணியை நடத்தினர்.

வெனிசுலா மீதான பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா மீளப் பெற வேண்டும். முடக்கப்பட்ட சொத்துக்களை மீளளிக்க வேண்டும் என அவர்கள் கோஷமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 10,000 பேர் பங்கேற்றதாக வெனிசுலா போக்குவரத்து அமைச்சர் ரமோன் வெலாஸ்குவேஸ் வெனிசோலானா டி தொலைக்காட்சி செய்திச் சேவைக்கு தெரிவித்தார்.

வெனிசுலா மக்களின் ஆர்ப்பாட்டத்துக்கு எங்கள் முழு ஆதரவையும் வழங்கியுள்ளோம். அவர்களுக்கு எங்கள் ஆதரவு உண்டு. முடக்கப்பட்ட அனைத்து சொத்துக்களையும் திரும்பப் பெறும் வரை தொடர்ந்து அணிதிரள்வோம் எனவும் வெனிசுலா போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்காவால் முடக்கப்பட்ட சொத்துக்களில் வெனிசுலா நிறுவனமான எம்ட்ராசூருக்கு சொந்தமான விமானமும் உள்ளது. அமெரிக்க நீதிபதி பிறப்பித்த உத்தரவு காரணமாக ஆர்ஜென்டினாவில் இந்த விமானம் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் விமானத்தை திருப்பி தர வேண்டும் என்று வெலாஸ்குவேஸ் கூறினார்.

சர்வதேச வங்கிகளில் வெனிசுலாவின் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எங்களுடைய சொத்துக்களை எங்களுக்குத் திருப்பித் தருமாறு நாங்கள் அமெரிக்க அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம். எங்கள் உழைப்பால் பெற்ற சொத்துக்களை அமெரிக்கா முடக்கி வைத்திருப்பதை ஏற்க முடியாது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சட்டவிரோதமாக பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் முடக்கப்பட்ட வெனிசுலாவின் தேசிய சொத்துக்களை பாதுகாக்கவும் மீட்க வெனிசுலா அணிதிரண்டுள்ளது என அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ தெரிவித்துள்ளார். (அ)

# அமெரிக்காவில் ஒரே நாளில் 1,424 பேருக்கு குரங்கம்மை!

## நிலைமை மேலும் மோசமாகலாம்

நியூயோர்க், ஓக.11

**அமெரிக்காவில் கடந்த திங்கட்கிழமை ஒரே நாளில் 1,424 குரங்கம்மை தொற்று நோயாளர்கள் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டனர். நாட்டில் ஒரே நாளில் உறுதி செய்யப்பட்ட அதிக குரங்கம்மை தொற்றாக இது அமைந்துள்ளது.**



அத்துடன், கடந்த 15 நாட்களுக்குள் தினசரி தொற்று நோயாளர் தொகை 3 மடங்காக அதிகரித்துள்ளது.

உலகில் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இங்கு இதுவரை 8,934 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. சோதனைகள் மிகக் குறைவான உள்ளதால் பாதிப்புகள் இன்னும் அதிகமாக இருக்கலாம் என சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உலகளவில் 30,189 பேருக்கு இதுவரை குரங்கம்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. உலகளவில் பதி வான ஒட்டுமொத்த குரங்கம்மை நோயாளர்களில் 30 வீதமானவர்கள் அமெரிக்கா வில் உள்ளனர்.

அமெரிக்காவில் புதிய கல்வியாண்டு வரும் வாரங்களில் தொடங்க உள்ளதால் தொற்று விரைவில் மோசமடைய கூடும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர்.

பகல்நேர பராமரிப்பு நிலையங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், சிறைச்சாலைகள் மற்றும் பிற அமைப்புகளில் குரங்கம்மை பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது என வொஷிங்டனில் உள்ள குழந்தைகள் தேசிய மருத்துவமனையின் தொற்று நோய் நிபுணரான டாக்டர் அலெக்ஸாண்ட்ரா ப்ரூக்லர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவில் ஒருபால் உறவில் நாட்டம் கொண்ட ஆண்கள் சுமார் 17 இலட்சம் பேர் குரங்கம்மை அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக அமெரிக்க நோய் தொற்று மற்றும் தடுப்பு மையத்தின் பணிப்பாளர் ரோசெல் வாலென்ஸ்கி எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கியூப வரலாற்றில் மோசமான தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள்!

ஹவானா, ஓக. 11

கியூபாவின் வரலாற்றில் மிக மோசமான தீ விபத்து என வர்ணிக்கப்படும் அந்நாட்டு எண்ணெய் சேமிப்பு கிடங்குகளில் ஏற்பட்ட தீபரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை வரை 5 நாட்கள் தொடர்ச்சியாக பற்றி எரிந்த தீயில் எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் 40 வீதம் அழிந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கியூபாவின் மதன்சாஸ் நகரில் உள்ள எண்ணெய் சேமிப்புக் கிடங்கு ஒன்றில் மின்னல் தாக்கியதில் ஏற்பட்ட தீ கட்டுப்பாடின்றி பரவியதில் 4 எண்ணெய் சேமிப்புக் குதங்கள் வெடித்துச் சிதறின. அதில் ஒருவர் பலியானதுடன், 121 பேர் தீக்காயங்களுக்கு உள்ளாயினர். 14 தீயணைப்பு வீரர்கள் காணாமல் போயுள்ளதாக கியூபா அதிகாரிகள் தெரிவித்தனர். மதன்சாஸ் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடியுடன் கூடிய மழையின்போது மின்னல் தாக்கி எண்ணெய் சேமிப்புக் குதங்கள் தீப்பற்றி வெடித்துச் சிதறின.

கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் எரிபொருள் சேமிப்பு ஆலை மதன்சாஸ் நகரில் உள்ள துறைமுகத்தில் அமைந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மாலை எரிபொருள் சேமிப்பு தொட்டி ஒன்றில் மின்னல் தாக்கியது. திங்களன்று நான்கு தொட்டிகள் கொண்ட பகுதிக்கும் தீ பரவி பெரிய வெடிப்புகள் ஏற்பட்டன.

100 க்கும் மேற்பட்ட மெக்சிகன் மற்றும் வெனிசுலா தீயணைப்பு வீரர்களுடன் இணைந்து கியூபா தீயணைப்பு வீரர்கள் கடும் முயற்சிகளை செய்தபோதும் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் கடினமாக இருந்தன.



நேற்று முன் தினம் செவ்வாயன்று ஹெலிகொப்டர்கள் உதவியுடன் தீயை அணைக்கும் முயற்சி தொடர்ந்து இடம்பெற்றது. மெக்சிகோ அனுப்பிய இரண்டு தீயணைப்பு படகுகள் மற்றும் கனரக தீயணைப்பு கருவிகளும் பயன்படுத்தப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை தீயைக் கட்டுப்படுத்த முடிந்தது என கியூபா உள்துறை அமைச்சகத்தின் போக்குவரத்துத் தலைவர் ரோலண்டோ வெசினோ தெரிவித்தார். (அ)

# தாய்வான் அருகே சீன இராணுவத்தின் தீவிர போர்ப் பயிற்சி தொடர்கின்றது!

பீஜிங், ஓக. 11

தாய்வான் அருகே சீன இராணுவத்தின் போர் பயிற்சி நேற்று முன் தினமும் தொடர்ந்து இடம்பெற்றது.

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கிழக்கு கட்டளை பிரிவு தாய்வான் தீவைச் சுற்றியுள்ள நீர் மற்றும் வான்வெளியில் அதன் கூட்டுப் போர் பயிற்சியை தொடர்ந்தது.

கூட்டு முற்றுகை மற்றும் கூட்டு ஆதரவு நடவடிக்கைகளில் இந்தப் பயிற்சியில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. வான்வெளி கட்டுப் பாட்டு செயற்பாடுகள், வானில் பறந்தவாறே எரிபொருள் நிரப்புதல், வான்-கடற்படை ஆதரவு பயிற்சிகளில் கிழக்கு கட்டளை தலைமையத்திக் கீழ் உள்ள விமானப் படையினர் ஈடுபட்டனர்.

முன்னெச்சரிக்கை விமானங்கள், போர் விமானங்கள், வான்வழி எரிபொருள் நிரப்பும் விமானங்கள் மற்றும் நெரிசலாக பறக்கக் கூடிய விமானங்கள் உட்பட பல போர் விமானங்களை இப்பயிற்சியில் பங்கேற்றதாக




சீன அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கூட்டுத் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை, வெடிமருந்துகள் மற்றும் பொருட்கள் வழங்கல், உபகரண பழுதுபார்ப்பு, காயமடைந்தவர்களை மீட்பது மற்றும் இடமாற்றம் செய்வதற்கான பயிற் சிகளும் நேற்று முன் தினம் நடத்தப்பட்டதாக சீன அரச ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# மேற்குக் கரையில் மூன்று பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் படையால் சுட்டுக்கொலை!

ஜெருசலேம், ஓக. 11

ஆக்கிரமிப்பு வடக்கு மேற்குக் கரை நகரமான நப்லஸில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இஸ்ரேலிய எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட பலஸ்தீனர்கள் மூவர் இஸ்ரேலிய படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் 40 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த 10 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும், மருத்துவ சிகிச்சைக்காக நாப்லஸ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பலஸ்தீனிய செம்பிறைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் பலஸ்தீனர்களை தேடி கைது செய்ய வந்த இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு மேற்குக் கரையில் தொடர்ச்சியான துப்பாக்கிச் சூட்டு தாக்குதல்களை நடத்தியதற்காக இஸ்ரேலால் தேடப்படும் இப்ராஹிம் அல்-நபுல்சியின் வீட்டை இஸ்ரேலிய படைகள் பழைய நகரமான நப்லஸில் சுற்றி வளைத்ததாக இஸ்ரேலிய பொலிஸார் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்-நபுல்சியின் வீட்டில் அவருடன் வேறு சில பயங்கரவாதிகளும் இருந்ததாகவும் இங்கு மேற்கொள்ளப்பட்ட விசேட இராணுவ நடவடிக்கையில் அல்-நபுல்சி உட்பட மூன்று பலஸ்தீனிய துப்பாக்கிதாரிகள் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேலிய இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு





## சிம்பாவேக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு

ஹராரே, ஓக. 11

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. ஒருநாள் போட்டி (3 போட்டி ) தொடரை 3-0 என்ற கணக்கிலும், 20 ஓவர் போட்டி (5 போட்டி) தொடரை 4-1 என்ற கணக் கிலும் இந்தியா கைப்பற்றியது.

அடுத்து இந்திய அணி சிம்பாவே சென்று விளையாடுகிறது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் இந்தியா- சிம்பாவே அணிகள் மோதுகின்றன. வருகிற 18ஆம் திகதி ஒருநாள் போட்டி ஆரம்பமாகிறது.

2ஆவது போட்டி 20ஆம் திகதியும், 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி 22ஆம் திகதியும் நடக்கிறது. மூன்று போட்டிகளும் ஹராரேவில் நடக்கிறது.

சிம்பாவே அணிக்கு எதிராக ஒருநாள் போட்டி தொடருக்கு ஷிகர் தவான் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தீபக் சாகர், வாஷிங்டன் சுந்தர் அணிக்கு திரும்பி உள்ளனர்.

அணி விவரம் :

ஷிகர் தவான் (அணித் தலைவர்), ருதுராஜ் கெய்க்வாட், ஷுப்மன் கில், ராகுல் திரிபாதி, தீபக் ஹூடா, வாஷிங்டன் சுந்தர், அக்ஷர் பட்டேல், இஷான் கிஷன், சஞ்சு சாம்சன், ஷர்துல் தாகூர், குல்தீப் யாதவ், அலேஷ் கான், பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ், தீபக் சாகர்.

# ரென்னிஸ் ஜாம்பவான் செரீனா வில்லியம்ஸ் ஓய்வு!

நியூயோர்க், ஓக. 11

அமெரிக்க முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் அமெரிக்க ஓப்பன் தொடருக்கு பின்னர் ரென்னிஸ் விளையாட்டில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.



40 வயதான செரீனா வில்லியம்ஸ் , 23 கிராண்ட்ஸ் லாம் பட்டங்களை வென்று ரென்னிஸ் உலகின் ஜாம்ப வானாக வலம் வருகிறார். இவர் 4 ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளார். இந்த நிலையில் அமெரிக்க ஓப்பன் தொடருக்கு பின்னர் ரென்னிஸ் விளை யாட்டில் இருந்து ஓய்வு பெறவுள்ளர் என்று அவர் அறிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான அமெரிக்க ஓப்பன் தொடரில் பங்கேற்ற பிறகு தனது வாழ்க்கையில் முக்கியமான பல்வேறு விஷயங்களில் கவனம் செலுத்தவுள்ளார் என்று கூறியுள்ளார் செரீனா. இந்த ஆண்டு அமெரிக்க ஓப்பனை வெல்ல முயற்சிப்பேன் என்றும் அவர் கூறி னார்.

ஒய்வு முடிவு குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வாழ்க்கையில் வேறு ஒரு திசையில் செல்ல முடிவு செய்ய வேண்டிய நேரம் வரும். நீங்கள் எதையாவது அதிகமாக நேசிக்கும்போது அதை விட்டு விலகும்

நேரம் எப்போதும் கடினமாக இருக்கும். நான் ரென்னிஸை ரசிக்கிறேன். ஆனால், ஒய்வு பெறுவதற்கான நேரம் நெருங்கியுள்ளது.

நான் ஓர் அம்மாவாக இருப்பதில் கவனம் செலுத்த வேண்டும். ஓய்வு என்ற வார்த்தை எனக்குப் பிடித்ததில்லை. நான் இதை ஒரு மாற்றமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். நான் என்ன செய்கிறேன் என்பதை விவரிக்க சிறந்த வார்த்தை பரிணாமம். நான் ரென்னிஸிலிருந்து விலகி, எனக்கு முக்கியமான ஏனையஷ விஷயங்களை நோக்கிப் பரிணமித்து வருகிறேன்.

சில வருடங்களுக்கு முன்பு நான் செரீனா வென்ச்சர்ஸ் என்ற மூலதன நிறுவனத்தை தொடங்கினேன். அதன் பிறகு நான் ஒரு குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்தேன். நான் அந்த குடும்பத்தை வளர்க்க விரும்புகிறேன்.” என்றார். (ஐ)

# ஐ. சி. சியின் துடுப்பாட்ட தரவரிசை; சூர்யகுமார் இடத்தை தக்கவைத்தார்!



டுபாய், ஓக. 11

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இருபது - 20 தொடரை 4-1 என்ற கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது. இந்நிலையில், இருபது -20 கிரிக்கெட் தர வரிசை பட்டியலை ஐ. சி. சி. நேற்று வெளியிட்டது.

இதன்படி, இருபது 20 கிரிக்கெட்டில் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில், 818 புள்ளிகளுடன் முதலிடத்தில் பாகிஸ்தானின் பாபர் அஸாம் நீடிக்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் சிறப்பாக ஆடிய இந்திய அணியின் சூர்யகுமார் யாதவ் இரண்டாவது இடத்தில் உள்ளார். முகமது ரிஸ்வான் 3ஆவது இடத்திலும், தென்னாபிரிக்காவின் எய்டன் மார்க்ரம் 4ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் டேவிட் மலன் 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

சிறந்த பந்து வீச்சாளர் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹசல்வூட் 792 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். தென்னாபிரிக்காவின் பத்ரைஸ் ஷம்சி 2ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் 3ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் அடில் ரஷித் 4-வது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் அடம் சம்பா 5ஆவது இடத்திலும் உள்ளனர். சிறந்த சகலதுறை வீரர்களுக்கான பட்டியலில் 267 புள்ளிகளுடன் ஆப்கானிஸ்தானின் முகமது நபி முதல் இடத்தில் உள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக பங்களாதேஷின் ஷகிப் அல் ஹசன் 2ஆவது இடத்திலும், இங்கிலாந்தின் மொயீன் அலி 3ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் கிளென் மக்ஸ்வெல் 4ஆவது இடத்திலும், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் ரோஹன் முஸ்தபா 5ஆவது இடத்திலும் உள்ளனர். (ஐ)

# இரு உலகக் கிண்ணங்களை வென்ற ஆஸி. அணி தலைவி தற்காலிக ஓய்வு

சிட்னி, ஓக. 11

இரு முறை உலகக் கிண்ணங்களை வென்ற அவுஸ்திரேலிய மகளிர் அணித் தலைவி மெக் லேனிங், கிரிக்கெட்டிலிருந்து தற்காலிகமாக ஓய்வு பெறுகிறார் என்று அறிவித்துள்ளார்.

2020இல் இருபது -20 உலகக் கிண்ணம், 2022இல் ஒருநாள் உலகக் கிண்ணம், பொதுநலவாயப் போட்டிகள் என சமீபத்தில் மூன்று முக்கியமான கிண்ணங்களை மெக் லேனிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி வென்றது. இந்நிலையில் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தற்காலிக ஓய்வு எடுப்பதாக மெக் லேனிங் அறிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து விளையாடி வருகிறேன். என் மீது கவனம்ஷ செலுத்துவதற்காக இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று கூறியுள்ளார் மெக் லேனிங்.



2010இல் சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமானார் மெக் லேனிங். 2014இல் 21 வயதில் தலைவராக நியமிக்கப்பட்டார். 171 போட்டிகளுக்கு தலைமை தாங்கி 135 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். 2017 முதல் 5 போட்டிகளை மட்டுமே தவறவிட்டுள்ளார்.

# நியூசி. அணி ஒப்பந்தம் டிரெண்ட் போல்ட் விலகல்

வெலிங்டன், ஓக. 11



கிரிக்கெட் உலகம் மாறிக்கொண்டிருக்கிறது என்ப தற்கு இன்னோர் உதாரணமாக நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்திலிருந்து பிரபல வீரர் டிரெண்ட் போல்ட் விலகியுள்ளார்.

33 வயதான டிரெண்ட் போல்ட், நியூசிலாந்து அணிக்காக 78 டெஸ்ட் கள், 93 ஒருநாள், 44 இருபது - 20 போட்டிக ளில் விளையாடியுள்ளார். டெஸ்டில் 317 விக்கெட்களும் ஒருநாள் கிரிக்கெட்டில் 169 விக் கெட்களும் ரி-20யில் 62 விக்கெட்களும் எடுத்து நியூசிலாந்து அணியின் முக்கிய வீரராக உள்ளார்.

இந்நிலையில், பணிச்சுமை, குடும்பத்தினருடன் கூடுதல் நேரம் செலவழிக்க வேண்டும் போன்ற காரணங்களால் தன்னை அணி ஒப்பந்தத்திலிருந்து விலக்கிக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார் டிரெண்ட் போல்ட். இதனை நியூசிலாந்து கிரிக்கெட் சபையும் ஏற்றுக்கொண்டு அவரை விடுவித்துள்ளது.

நியூசிலாந்து அணிக்காக 12 வருடங்களாக விளையாடி வருகிறேன். என் மனைவி கெர்ட் மற்றும் மூன்று குட்டி மகன்களுக்காக இந்த முடிவை எடுத்துள்ளேன். குடும்பத்துக்கு முன்னுரிமை கொடுத்து கிரிக்கெட்டுக்குப் பிறகான வாழ்க்கைக்காகத் தயார்படுத்திக்கொள்கிறேன்.

ஒப்பந்தம் இல்லாததால் நியூசிலாந்து அணிக்குத் தேர்வாகும் வாய்ப்பை இம்முடிவு பாதிக்கும் என எனக்குத் தெரியும். வேகப்பந்து வீச்சாளராகக் குறைவான காலமே விளையாட முடியும் என்பதால் என்னுடைய வாழ்க்கையின் அடுத்தக்கட்டத்துக்கு நகர்கிறேன் என்று தனது முடிவு குறித்து விளக்கமளித்துள்ளார் போல்ட்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து போல்ட் ஓய்வு பெறவில்லையென்றாலும் இனிமேல் அவரை உலகக் கிண்ணம் போன்ற முக்கியமான சர்வதேசப் போட்டிகளில் மட்டுமே காணமுடியும் எனத் தெரிகிறது.

# மின் கட்டணத் திருத்தம் நியாயமற்ற செயல்பாடு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 11

மின்சாரக் கட்டணத் திருத்தத்தில் சமூக நீதிக் கோட்பாடுகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

குறைந்த மின்சார அலகுகளை பயன்படுத்தும் வீட்டு மின்சார நுகர்வோர் மீது அதிக சுமையை அரசாங்கம் ஏற்றியுள்ளது என அவர் கூறினார்.

ஆகவே மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய கட்டணத் திருத்தமானது நியாயமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார சபையின் அனைத்து நஷ்டங்களையும் மக்கள் மீது சுமத்துவது நியாயமில்லை என்றும் சம்பிக்க குற்றம் சாட்டினார்.

இதேவேளை, அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை செலுத்த முடியாதவர்களுக்கு அரசாங்கம் மானியம் வழங்க வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.



இல்லையெனில் அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் கூறினார். (அ)

# தனிப்பட்ட தகராறு காரணமாக குடும்பஸ்தர் வெட்டிக் கொலை!

கொழும்பு, ஒக. 11

தனிப்பட்ட தகராறு காரணமாகக் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவின் கலஹபிடிய பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் வெட்டுக் காயங்களுக்குள்ளான குறித்த நபர் மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

58 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் மற்றும் சந்தேகநபருக்கு இடையில் காணப்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். எனினும், அவர் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஐ.தே.கவை பலமாக்க திட்டம்!

கொழும்பு, ஒக. 11

ஐக்கிய தேசியக்கட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தலைமையிலான குழுவொன்று இதற்கான வியூகத்தை வகுத்து வருகின்றது.

விரைவில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வந்தாலும், 9 ஆவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடையும்வரை பொதுத்தேர்தலை நடத்துவதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே ஆளுங்கட்சி உள்ளது.

எனவே, முதலில் உள்ளாட்சிமன்ற தேர்தல் நடத்தப்படலாம். அதற்கான கால எல்லை தொடர்பில் ஆராயப்படுகின்றது. (அ)

# உணவு, எரிபொருள் பிரச்னையால் மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி

கொழும்பு, ஒக. 11

பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகையானது 30 முதல் 40 வீதம் வரை குறைந்துள்ளதாக இலங்கை தேசிய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவுப் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் பிரச்னையே பாடசாலை மாணவர்களின் வருகை குறைவதற்கு பிரதான காரணமாக அமைவதாக தெரியவந்துள்ளதாக இலங்கை தேசிய அதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மொஹான் வீரசிங்க தெரிவித்தார்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால், உணவு வழங்க முடியாமல், தங்கள் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாமல், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் ஏராளமான குடும்பங்கள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 22ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றில் முன்வைப்பு!

கொழும்பு, ஒக. 11

அரசியலமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், குறித்த சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்கென நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, சபையில் முன்வைத்தார்.

22 ஆவது திருத்தச்சட்டமூலம் ஏற்கனவே வர்த்தமானியில் வெளியாகியிருந்தாலும், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னர் அதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட சட்டமூலமும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொடர்பில் எவருக்காவது ஆட்சேபனை இருந்தால், அது தொடர்பில் 7 வேலை நாட்களுக்குள் உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம்.

மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம், சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் சபைக்கு தெரியப்படுத்துவார்.

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கமைய சட்டத்தை திருத்தி, சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாத வகையில் அதனை நிறைவேற்றிக்கொள்வதே அரசின் எதிர்பார்ப்பாகும்.

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டமூலத்தில் 19 மற்றும் 20 ஆவது திருத்தச்சட்டங்களில் இருந்த முக்கிய சிறப்பு அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அதேபோல விசேட சில ஏற்பாடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஏதேனும் ஒரு சட்டமூலம் வர்த்தமானியில், வெளியான பின்னர், அதனை சட்ட ரீதியாக உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த 7 நாட்களே வழங்கப்பட்டு வந்தது. அது 22 ஆவது திருத்தச்சட்டமூலம் ஊடாக 14 நாட்களாக்கப்பட்டுள்ளன.

அமைச்சுப் பதவியை வகிப்பவர், பதவி விலகினால், அமைச்சின் செயலாளர் பதவியும் வலுவிழக்கின்றது. இதனால் அரச சேவை ஸ்தம்பிக்கின்றது. எனவே, அமைச்சர் பதவி விலகினாலும், புதியவர் நியமிக்கப்படும்வரை, பணிகளை முன்னெடுக்கும் அதிகாரம் செயலாளருக்கு வழங்கும் ஏற்பாடு 22 இல் உள்ளது.

அரசியலமைப்பு பேரவைக்கு கட்சி மற்றும் சிறு கட்சிகளின் சார்பில் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் தொடர்பில் கட்சிகளே முடிவெடுக்கலாம். இது விடயத்தில் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் தலையீடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. சபாநாயகரின் கண்காணிப்பின்கீழ் பணி இடம்பெறும்." - எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி ஆளுநர் நியமனத்துக்கு, அரசியலமைப்பு பேரவையின் அனுமதியை ஜனாதிபதி பெறவேண்டும். 19 மற்றும் 20 ஆவது திருத்தச்சட்டங்களில் இந்த ஏற்பாடு இருக்கவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகிப்பவர், பாதுகாப்பு அமைச்சு பதவியை வகிப்பதற்கு 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 20 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் உயர்நீதிமன்ற நீதியரசர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அந்த ஏற்பாடு அவ்வாறே தொடரும்.

ஜனாதிபதி பதவியை வகிப்பவர், அமைச்சராக எடுக்கும் சில முடிவுகளுக்கு எதிராக அடிப்படை உரிமை வழங்கு தாக்கல் செய்யும் ஏற்பாடு 22 இற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. (அ)

# எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மண்ணெண்ணெய் விநியோகம்

கொழும்பு, ஒக. 11

மண்ணெண்ணெய் விநியோகம் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் தொடரும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மண்ணெண்ணெய் விலையை திருத்துவது குறித்தும் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். (அ)

# தங்க கடத்தலில் ஈடுபட்ட தம்பதியினர் சிக்கினர்!

கொழும்பு, ஒக. 11

12 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த இலங்கை தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் குழுவினால் குறித்த தம்பதியினர் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் வெல்லம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஓமானின் மஸ்கட்டில் இருந்து விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் அணிந்திருந்த ஆடைகளுக்கு இடையே நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை இதன்போது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# மஹிந்த, பஸில் ஆகியோருக்கான வெளிநாட்டு பயணத் தடை நீடிப்பு

கொழும்பு, ஒக. 11

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் செப்ரெம்பர் 5ஆம் திகதி வரை வெளிநாடு செல்ல முடியாது என உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு கோரிய மனு தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையாத நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# 75 வீத மின் கட்டண உயர்வு பெரும் அநீதி!

கொழும்பு, ஒக. 11

மின்சார சபைக்கு நஷ்டம் என்று கூறி 75 சதவீதம் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது அநியாயமானது எனவும், எனவே, இந்த முடிவு உடனடியாக மீளப்பெறப்பட வேண்டும் எனவும் தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையில் கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மேற்கொண்ட நிதி முறைகேடுகள், விலைமனுகோரல் நடைமுறை மீறல்கள் போன்றவற்றால்தான் அச்சபை நஷ்டத்தில் இயங்குகின்றது.

இந்நிலையில் அதன் சுமையை மக்கள் மீது திணிக்க இடமளிக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை, மின் கட்டண உயர்வுக்கு மேலும் சில தரப்பினரும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். (அ)

## தெற்காசியாவிலே...

முந்தோம். வன்முறையற்ற மக்கள் வெற்றியை நோக்கி இலங்கையை நாங்கள் வழி நடத்திச் சென்றோம். படைப்பாற்றலை முன்னிறுத்தினோம். இப்பொழுது இலங்கை மக்களின் போராட்டத்தை ஒரு புதிய ஒளியில் மீளெழுதுகிறோம்.

அனைவருக்குமான ஒரு மத்திய கட்டளைத் தலைமையை அல்லது அடுத்து என்ன செய்யவேண்டுமென எமக்குச் சொல்வதற்கான தலைவர்களை நாங்கள் கொண்டிருக்கவில்லை. இருந்தும் குறித்த எழுச்சி மிகுந்த தருணங்களின் கோரிக்கைகள் எம்மை ஒன்றிணைந்து செயலாற்ற வைத்தன.

எங்களைப் பிளவுபடுத்திய பல தசாப்த கால விரோதங்கள், இன, மத வேறுபாடுகள் மற்றும் ஏனைய தடைகளை சில சமயங்களில் வெற்றியோடு தாண்டியும் சில சமயங்களில் அவை உருவாகமல் முன்னெச்சரிக்கையோடு செயற்படவும் முயற்சித்தோம். அவர்கள் எங்களுக்கு இடையே ஒற்றர்களை அனுப்பினார்கள் குண்டர்களை ஏவினார்கள். எங்களை அழிக்க முகவர்களை அனுப்பினார்கள். அதுமட்டுமின்றி எங்கள் சொந்த மக்களையே எங்களுக்கு எதிராகத் திருப்பினார்கள் அவர்களில் சிலர் சாதாரண உடையிலும், சிலர் சீருடையிலும் ஊடுருவினர். இருந்தும் இதை மீறி நாங்கள் நிலைத்து நின்றோம்.

சமூக - அரசியல் நிலை மாற்றத்தை மக்களை ஒழுங்கமைத்தல் மற்றும் அதற்காகச் செயல்படுதற்கான ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்கிக் கொண்ட முறை மூலமாக நாம் சக இலங்கையர்களின் இதயம், மனம் மற்றும் உடலில் நாங்கள் இணைந்தோம். அது எங்கள் அனைவருக்குமான இடமாக காலிமுகத் திடலை மையமாகக் கொண்டு 'கோட்டா கோகம' என அறியப்படலானது. எங்கள் கூட்டுக் கனவுகளிலிருந்து ஒரு கிராமத்தை அங்கே நாங்கள் கட்டி எழுப்பினோம். அங்கே ஊழல் அரசியலின் அதிகார எல்லைகளை நாங்கள் தாண்டினோம். எங்களை அடக்கியொடுக்கும் தலைவர்கள் தொடர்ச்சியாக இதைப் புரிந்து கொள்ளத் தவறினர்.

இலங்கைப் பிரஜைகளான நாங்கள் இந்த அசாத்தியமற்றவைகளைச் சாத்தியமானதாக நடத்திக் காட்டியிருக்கிறோம்.

போராட்டம் தொடர்கிறது. ஓர் அடக்கு முறையாளரிடமிருந்தது மற்றொருவருக்கு அதிகாரத்தை மாற்றுவதற்கானது அல்ல அது மக்களை மதிக்கும் ஒரு தேசத்தைப் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்ட அந்தப் போராட்டத்தை நாங்கள் தொடர்வோம்.

நாங்கள் புதிய இலங்கையர்கள் மற்றும் நாங்கள் இங்கே இருக்கிறோம் - போராட்டத்துக்கு வெற்றி- என்றுள்ளது. (ஐ)

## எதிர்வரும்...

நாணயக்கார தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவிதுரு ஹல உறுமய, இலங்கை கம்யூனிஸக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, யுதுகம அமைப்பு, எமது மக்கள் சக்தி உட்பட மேலும் சில கட்சிகளும், தேசியவாத அமைப்புகளும் கூட்டணியில் இணைகின்றன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் இரவு கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே கூட்டணி தொடர்பான விவரத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினரையும் புதிய கூட்டணியில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன, எனினும், இது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் புதிய கூட்டணியில் இணையக்கூடும் என தகவல் வெளியாகியிருந்தாலும், அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. சுதந்திரக் கட்சி தனிவழி செல்வதற்கான சாத்தியமே அதிகம் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எனினும், தேர்தல் கால கூட்டணிக்கு பச்சைக்கொடி காட்டும் சாத்தியம் உள்ளது.

டிரான் அலஸ் மற்றும் அதாவுல்லாவின் கட்சிகள் ஆரம்பத்தில் 10 கட்சி கூட்டணியில் இருந்தாலும், தற்போது அரசுக்கு ஆதரவளித்து கூட்டணியிலிருந்து விலகிவிட்டன. (அ)

## சீனாவின்...

முன்முயற்சியின் மூலம் அதிக கடன்களைப் பெறுவது பற்றி வளரும் நாடுகள் இருமுறை யோசிக்க வேண்டும் என்று அவர் கேட்டுள் ளார்.

உலகளாவிய ரீதியில் பணவீக்க அதிகரிப்பு மற்றும் அபிவிருத்தி குறைந்து வருவதால் சந்தைகளில் அழுத்தங்கள் அதிகரித்து வருவதாக ஹந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித் துள்ளது.

மோசமான கடன் முடிவுகள் நாடுகளை கடன் நெருக்கடியில் தள்ளும் அபாயம் உள்ளது என்ற அடிப்படையில், சீனா, நாடுகளுக் கான கடன்களை மதிப்பிடுவதில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட் டார்.

இலங்கையில் சீன ஆதரவு உள்கட்டமைப்புத் திட்டங்கள் வருமானத்தை ஈட்டத் தவறியதாக பங்களாதேஸின் நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் சீனாவின் மீது அனைவரும் குற்றம் சுமத்து வதை,சீனா நிராகரிக்கின்றபோதும், சீனாவே இந்த நிலைமைக்கு பொறுப்பு கூறவேண்டும் என்று பங்களாதேஸின் நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் எந்தெந்த திட்டங்களுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதை தீர்மானிப்பதில் சீனா போதுமான அளவு கடுமையாக இருக்கவில்லை என்பதை அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி எடுத்துக் காட்டுகிறது.

எனவே ஒரு திட்டத்துக்கு கடன் கொடுப்பதற்கு முன் முழுமையான ஆய்வை, சீனா மேற்கொள்ள வேண்டும் என்றும் ஏ.எச்.எம்.முஸ்தபா கமல் தெரிவித்தார். (அ)

## சிங்கப்பூரிலிருந்...

படுத்தியதால் ஏற்பட்ட அமைதியின்மையைத் தொடர்ந்து, கடந்த ஜூலை 14ஆம் திகதி மாலைதீவு வழியாக கோட்டாபய சிங்கப்பூருக்குச் சென்றார்.

அவர் சிங்கப்பூரை விட்டு வெளியேறி தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கிற்கு இன்று வியாழக்கிழமை செல்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாக பெயர் குறிப்பிட விரும்பாத இரண்டு தகவல் வட்டாரங்கள் தெரிவித்ததாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கைகளுக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு உடனடியாக பதிலளிக்கவில்லை என்றும் , தாய்லாந்து அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் ரட்சடா தனடிரெக் இது குறித்து ரொய்ட்டர்ஸிடம் கருத்து வெளியிட மறுத்துவிட்டதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## விக்னேஸ்வரன்...

சந்திப்பில் பேசப்பட்டன என்றபோதிலும், தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாடு குறித்து உறுதியான தகவல்களை அறிய முடியவில்லை.

இந்த சந்திப்புக்கு முன்னதாக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணியும் ஜனாதிபதியை தனியாக சந்தித்துப் பேசின. பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகளும் ஜனாதிபதியுடன் தனியாக உரையாடியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச செலவு ரூ.47,943 கோடி அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 11

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு திருத்தச் சட்டமூலத்தின்படி, இந்த வருட அரசாங்கத்தின் மொத்தச் செலவு 47 ஆயிரத்து தொள்ளாயிரத்து 43 கோடி ரூபாயால் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டுக்காக, கடந்த நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின்படி, மொத்தச் செலவு, 2 இலட்சத்து 9ஆயிரத்து 664 கோடியே 65 இலட்சத்து 58 ஆயிரமாகும்.

இருப்பினும் திருத்தச் சட்ட மூலத்தின்படி மொத்தச் செலவு 3 இலட்சத்து 27 ஆயிரத்து 587 கோடியே 65 இலட்சத்து 58 ஆயி ரம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதில் பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கே அதிகளவாக 73 ஆயி ரத்து 468 கோடி ரூபாய் ஒதுக் கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு ஆயிரத்து 344 கோடியே 51 இலட்சம் ரூபாயும் அதற்கு அடுத்ததாக நிதி அமைச் சுக்கு 46 ஆயிரத்து 720 கோடி ரூபா யும் பாதுகாப்பு அமைச்சுக்கு முப்பத்தேழாயிரத்து அறுநூற்று முப்பத்திரண்டு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சுக்கு இருபதாயிரம் கோடி ரூபாயும் சுகாதார அமைச்சுக்கு 24 ஆயிரத்து 807 கோடி ரூபாயும் வர்த்தக அமைச்சுக்கு 937 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சுக்கு 37 ஆயிரத்து எழுநூற்று பத்து கோடி ரூபாயும் விவசாய அமைச்சுக்கு 13 ஆயிரத்து 856 கோடி ரூபாயும் மின் சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு இரண்டாயிரத்து எழுநூற்று அறு பத்தேழு கோடி ரூபாயும் ஒதுக்கப் பட்டுள்ளது. (அ)

## 12 திட்டங்களுக்கு...

இந்த நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, ஜெய்கா நிறுவனம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொண்டு வந்த இரண்டாவது முனைய விஸ்தரிப்புக்காக தாய்செய் நிறுவனத்துக்கு வழங்கிய நிதியுதவியை நிறுத்தியது.

இந்நிலையிலேயே, ஜப்பான் 12 திட்டங்களுக்காக வழங்கிய நிதியை நிறுத்தியுள்ளதாக நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

முன்னர் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஜப்பானுடனான உறவு சோதனைக்குள்ளானது. ஜெய்காவுடன் 50 கோடி டொலர் மதிப்புமிக்க இலகு ரயில் போக்குவரத்து திட்டத்தை முத்தரப்பு ஒப்பந்தத்தை இரத்து செய்தார். இதே போன்று கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனைய விடயத்திலும் இந்தியா - ஜப்பான் புறக்கணிக்கப்பட்டன.

இந்நிலையில், பல மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கிய ஜப்பானுடனான உறவை வலுப்படுத்த தற்போது அரசு முயல்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்வெட்டு...

வெள்ளி, சனிக்கிழமைகள் மாலை 6 மணி முதல் 9 வரை நாடு முழுவதும் சுழற்சி முறையில் ஒரு மணி நேரம் மின்வெட்டு நடைமுறையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## மனிதாபிமான...

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 90 நாட்கள் வரை தங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## எகிறுகின்றது...

பட்டவர்களாவார். 4 ஆண்கள் மற்றும் 5 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

மேலும், கொரோனா தொற்றால் நாட்டில் இதுவரை 16 ஆயிரத்து 594 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெற்றோல்...

தில் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழையை சேர்ந்த புன்னாலைக்கட்டுவனில் வசித்து வந்த சொரூபன் (வயது 40) என்ற நபரே இவ்வாறு மரணமானார் என்று அறிய வருகின்றது.

உயிரிழந்த நபர், பெற்றோல் பெறுவதற்காக சிலர் மட்டுமே நின்ற வரிசையில் காத்திருந்த போது திடீரென்று மயங்கி வீழ்ந்தார். அவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அங்கு வரும் முன்னரே அந்த நபர் உயிரிழந்து விட்டார் என்று பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)

## யுவான்...

சீனாவை கோரியது.

வரும் 15ஆம் திகதி இந்தியாவின் சுதந்திர தினம் என்பதால், அந்த நாளை கடந்து இலங்கை வருமாறு சீனாவிடம் கேட்கப்பட்டதாகவும் இதையேற்றே சீனா அந்த நாளைக் கடந்து இலங்கை வரும் என்று கூறப்படுகின்றது. இதனையே முன்னாள் ஜனாதிபதியும் நேற்று பாராளுமன்றில் வெளிப்படுத்தினார்.

இதனிடையே, இந்திய இராணுவ பலத்தை கண்காணிக்கும் நோக்கில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாகவே கப்பல் இலங்கையை வந்தடையும் என்று இந்திய தரப்புகள் தெரிவிக்கின்றன. இது இலங்கைக்கு பலத்த நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, சீனாவின் சமூக வலைத்தளங்களான ரிக்-ரோக், டூயின் போன்றவற்றில் இலங்கை தூதரகத்தின் விளம்பர பிரசாரங்களுக்கு சீனா தடை விதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், இந்தத் தளங்கள் இலங்கைக்கு எதிரான கருத்துக்களால் நிரம்புகின்றன. மேலும், சீன பல்பொருள் அங்காடிகளில் இலங்கையின் பொருட்களை கொள்வனவு செய்வதை தாமதப்படுத்துவதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கப்பல் விவகாரத்தில் இலங்கையின் முடிவால் சீனாவுக்கு ஏற்பட்ட அதிருப்தியே இவ்வாறு வெளிப்படுவதாக தெரியவருகின்றது.

இதனிடையே, நேற்று முன்தினம் இலங்கையிலிருந்து 600 கிலோமீற்றர் தொலைவில் நின்ற சீனக் கப்பல், நேற்றைய தினம் தனது பாதையை அந்தமான் தீவு நோக்கி மாற்றியது. எனினும், பின்னர் இலங்கையை நோக்கி திரும்பி மிக மெதுவாக நகர்ந்து வருகிறது என்றும் சர்வதேச தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## மண்ணெண்...

வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மண்ணெண்ணெய் வழங்கும்போது மீனவர்களுக்கு செல்லாமல் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது. தனியார் பஸ்களில் டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டது. எனவே அது தவிர்க்கப்பட வேண்டும்.

இதேவேளை, எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மண்ணெண்யை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

(தொடர்புடைய மற்றொரு செய்தி பக்கம் 10 இல்)

ஈழநாடு
Eelanadu







## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 02 - 1960 | 07 - 08 - 2022 |

### திருமதி பவானி ஸ்ரீகாந்தா

யாழ். கரம்பொன் மேற்கை பூர்வீகமாகவும், கொழும்பைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Münster ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பவானி ஸ்ரீகாந்தா 07-08-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற இராசநாயகம் ( பொலிஸ் இன்ஸ்பெக்டர்), உமாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற செல்வரட்ணம், நாகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகளும்,ஸ்ரீகாந்தா அவர்களின் அன்பு மனைவியும், ஹஸ்தூரி அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சாம்பவி, சிவபாலன், ஆனந்தபாலன் மற்றும் புனிதவதி, ஸ்ரீபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,பத்மினி, ஜெயகாந்தன், சிவகாந்தன், ராகினி, ஜெமினிகாந்தன், சிவாஜினி, சாந்தலட்சுமி, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,செல்வராஜா, வேலாயுதபிள்ளை, வரதராஜா, ராஜினி, உதயகுமாரி, விசுவநாதன், அனு, முகிலன் ஆகியோரின் அன்புச் சகலியும், கார்த்திகேயன் – அனுஷா, சேந்தன் – பிறேமலதா, நிமலன் – சுகந்தினி, பிரதாயினி – ராஜேஸ்வரன், மாதங்கி ஆகியோரின் பாசமிகு சித்தியும்,ஹரிராம், வினோத், லகீசன், ஜானுஜா, சங்கவி, சஞ்சீவ், விதுன், தேனுஷா, தஷானா, ரிஷானா ஆகியோரின் அன்பு அத்தையும்,ரேணுகா, தர்ஷன், தர்ஷிகா, லக்சன், சந்தியா, சானுஜா, சாய் சாந்த் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும்,ரதுஷா, ஜஸ்விகா, ஷரூனி, வைஷ்ணவி, தஷ்விகா, அட்சயன், ஆதிபன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

*கிரியை :*
Monday, 15 Aug 2022 12:30 PM - 3:00 PM
Cemetery Hoheward Am Waldfriedhof 20, 48165 Münster, Germany,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**ஸ்ரீகாந்தா - கணவர்**
**Mobile : +49250129225**
**ஹஸ்தூரி - மகள்**
**Mobile : +4915739305792**
**புனிதவதி - சகோதரி**
**Mobile : +94718565668**

தகவல்:
**ஹஸ்தூரி - மகள்**

# கொலை செய்யப்பட்ட எம்.பியின் மோதிரம் களவாடிய மூவர் கைது!

*கொழும்பு, ஓக. 11*

*கடந்த மே மாதம் 09 ஆம் திகதி நிட்டம்புவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சந்தேகநபர்கள் நிட்டம்புவ மற்றும் ரன்பொகுணகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*தாக்குதலின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அணிந்திருந்த 02 தங்க மோதிரங்கள் மீட்கப்பட்டமை மற்றும் மெகஹகிவுல உள்ளூராட்சி சபைத் தலைவரின் கையடக்கத் தொலைபேசி கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*மேலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்டபோது அணிந்திருந்த மற்றுமொரு தங்க மோதிரத்தை அகற்றியமைக்காக மற்றைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்களால் பாராளுமன்ற உறுப்பினரிடம் இருந்து களவாடப்பட்ட 03 தங்க மோதிரங்கள் அடகு கடையொன்றில் அடகு வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சந்தேக நபர்கள் இரு வரும் அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்ட பின்னர் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.* (அ)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 - 10 - 1941 | 07 - 08 - 2022 |

### திருமதி சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி

யாழ். புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி அவர்கள் 07.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற குட்டியர், தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதி தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும்,ஸ்ரீரதி அவர்களின் அன்புத் தாயாரும், வரதராஜன் அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, சின்னப்பிள்ளை, பொன்னையா, செல்லத்துரை, தம்பிப்பிள்ளை மற்றும் செல்வரத்தினம்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,பார்த்தீபன், கஜந்தா, காலஞ்சென்ற அனுஷா, பிரவீன், ஜனனி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 11 Aug 2022 11:30 AM - 3:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Thursday, 11 Aug 2022 3:30 PM - 4:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave> Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Thursday, 11 Aug 2022 4:30 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வரதராஜன் - மருமகன்.**

தொடர்புகளுக்கு:
**வரதராஜன் - மருமகன்** Mobile : +14164646169
**ஸ்ரீரதி - மகள்** Mobile : +14164394654
**தாசன் - உறவினர்** Mobile : +16478999837
**தயாளன் - உறவினர்** Mobile : +14164642972

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 12 - 1941 | 05 - 08 - 2022 |

### திருமதி ஞானம்மா சந்திரசேகரம்

*(ஞானம் ஸ்டோர் நாரஹேன்பிட்டி- உரிமையாளர், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் பழைய மாணவி)*

யாழ். புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, யாழ். பிறவுண் வீதி, கனடா Markham ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானம்மா சந்திரசேகரம் கடந்த 05-08-2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா – நாகம்மா தம்பதிகளின் அருமை மகளும், கந்தையா மனோன்மணி தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம் அவர்களின் பாசமிகு மனைவியும், விஜிதா (லதா – கனடா), சுகந்தினி (நோர்வே), காலஞ்சென்ற ஞானசேகரன் ஆகியோரின் ஆருயிர் அன்னையும்,அருட்பிரபாகர் (Kubera Accounting & Tax Services – கனடா), பரணிதரன் (நோர்வே) ஆகி யோரின் அன்பு மாமியும்,பிரவீன்(சுகன்யா), பிரதன்யா(உமேஷ்), தனிசா, மானுசா, பூரணி ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,காலம்சென்றவர்களான ஐயாத்துரை, நாகேசு, செல்லம்மா, நல்லையா, கண்ணம்மா, செல்வநாயகி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, இரத்தினபூபதி, சின்னத்துரை, அருளம்பலம், செல்வானந்தம், தனலட்சுமி(சுப்பிரமணியம்), ஏரம்பு(சின்னம்மா), இராசம்மா(சுந்தரமூர்த்தி), ஞானம்மா(வரராசசிங்கம்) மற்றும் அருளம்மா(கனடா) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Saturday, 13 Aug 2022 5:00 PM - 9:00 PM
Sunday, 14 Aug 2022 10:30 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*கிரியை :*
Sunday, 14 Aug 2022 11:00 AM - 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*தகனம்:*
Sunday, 14 Aug 2022 1:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**லதா(பிரபா) - மகள்**
**Mobile : +16474018540**
**Phone : +19052018778**
**லதா(பிரபா) - மகள்**
**Mobile : +14168970897**
**பிரவீன் - பேரன்**
**Mobile : +16479676273**
**சுகந்தினி பரணி - மகள்**
**Mobile : +4721695669**

தகவல்:
**லதா(பிரபா) மகள்**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*